விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 29 சனிக்கிழமை (14.08.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 238

# நாட்டை முடக்கும் கோரிக்கை நிராகரிப்பு

## இராணுவத் தளபதி சவேந்திர சில்வா



*(கொழும்பு)*

- மாகாணங்களுக்கிடையே மீண்டும் முழுநேரப் பயணத் தடை அமுல்.
- பொதுப் போக்குவரத்து இடைநிறுத்தம்.
- செப்.15 முதல் கோவிட் தடுப்பூசி அட்டையுடனேயே பொது இடங்களுக்கு செல்ல முடியும். (19ஆம் பக்கம் பார்க்க)

## கொரோனா
## யாழ் - 64
## வடக்கு - 97

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலை, யாழ்.பல்கலைக்கழக ஆய்வுகூடங்களில் நேற்று மேற் கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோத னைகளில் யாழ்.மாவட்டத்தி னைச் சேர்ந்த 64 பேர் உட்பட வடக்கு மாகா 19

## வரதராஜ பெருமாள் ஆலய மகோற்சவம் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த ஆவணி மகோற்சவத்தை இம் முறை நடத்தமுடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என ஆலய பரி பாலன சபை அறிவித் துள்ளது. 19

முன்னாள் அமைச்சர்
## மங்களவுக்கு கொரோனா

(கொழும்பு)

முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு கொரோ னாத் தொற்று உறுதி யாகியுள்ளது. 19

## கோவிட்டை கட்டுப்படுத்த சரியான முடிவு எடுக்காவிடின் நாட்டில் 30 ஆயிரம் பேர் வரை உயிரிழப்பார்கள்

### தொற்று நோயியல் நிபுணர் நிஹால் அபேசிங்க எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

வேகமாக பரவிவரும் டெல்டா வகையைக் கட்டுப்படுத்த பய ணக் கட்டுப்பாடுகள் உட்பட அத் தியாவசிய சுகாதார பரிந்துரை களை செயல்படுத்தப்படாவிட் டால், இந்த ஆண்டு இறுதிக்குள் சுமார் 30 ஆயிரம் பேர் கொரோனா தொற்றுநோயால் இறக்க நேரிடும் என தொற்று நோயியல் நிபுணர் மருத்துவர் நிஹால் அபேசிங்க எச்சரித் துள்ளார்.

தேசிய மக்கள் சக்தி நேற்று நடத்திய ஊடக சந்திப் பில் மருத்துவர் இந்த 19

## நாட்டை முழுமையாக மூடும் திட்டம் அரசிடம் இல்லை

### இராஜாங்க அமைச்சர் சன்ன

(கொழும்பு)

நாட்டை முழுமையாக மூடும் திட்டம் அரசாங்கத்திற்கு இல்லை என இராஜாங்க அமைச்சர், பேரா சிரியர் சன்ன ஜயசுமன தெரிவித் தார்.

நேற்று நடைபெற்ற விசேட கலந்துரையாட 19

## நல்லூரில் கொடியேற்றத்தை பார்க்கவிடாமல் பஸ் வண்டியை குறுக்காக நிறுத்திய பொலிஸார்

### அடியவர்கள் விசனம்



(யாழ்ப்பாணம்)

நல்லூர்க் கந்தனின் கொடியேற்றத்தை அடியவர்கள் பருத்தித் துறை வீதியில் நின்று பார்ப்பதைத் தடுக்கும் வகையில் பொலிஸார் வீதிக்குக் குறுக்காக பஸ் வண்டியை நிறுத்தியதால் அடியவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே சிறிது 19

## கொரோனா உச்சத்தில் இலங்கை மேலும் 155 பேர் உயிரிழப்பு

### நேற்றும் +3,142 பேருக்கு தொற்று

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா மரணங்கள் தொடர்ச்சியாக அதி கரித்து வரும் நிலையில் 2 ஆவது நாளாக ஒரே நாளில் 150க்கு மேற் 19

கரைச்சி பிரதேச சபை ஊழியர்
## வீதியில் திடீரென விழுந்து உயிரிழப்பு

(முறிகண்டி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை ஊழியர் ஒருவர் நேற்று திடீரென 19

கொரோனாவால்
## யாழில் மேலும் ஐவர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மேலும் 5 பேர் கோவிட்-19 நோயி னால் உயிரிழந்துள் 19

## குளவி கொட்டியதில் இளம் குடும்பஸ்தர் பலி

### யாழ்.புங்குடுதீவில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

யாழ். புங்குடுதீவு பகுதியில் கருங்குளவி கொட்டி யதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள் ளார்.

## 60 வயதுக்கு மேற்பட்டோர் மீது கவனம் செலுத்துங்கள்

### சுகாதார அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ஆலோசனை

(கொழும்பு)

60 வயதிற்கு மேற்பட்டவர் கள் மற்றும் நீண்டகாலமாக தொற்றா நோய்களால் அவதிப் பட்டு வருபவர்கள் குறித்து சிறப்புக்கவனம் 19

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF JAFFNA

## INVITATION FOR BIDS

**Supply of Skilled, Semiskilled and Unskilled Workers to the University of Jaffna - 2021/2022**

1. The Chairman, Procurement Committee, University of Jaffna invites sealed Bids for the above contract up to 2.00 p.m. on **06th September 2021**.

2. Period of contract should be 365 days subject to a performance evaluation period of 60 days.

3. Expected project cost per annum

| | |
|---|---|
| Total expected cost (annual) | 36 Million |
| Jaffna premises | 18 Million |
| Ariviyalnagar premises | 18 Million |

4. Firms which satisfy the following conditions are eligible to submit Bids. Documentary evidences should be provided with Bids.

   4.1 Must be registered in Sri Lanka under the Company's Acts or Business Name Registration Ordinance.

   4.2 Average of annual volume of supply of skilled, semiskilled and unskilled workers contracts performed in the last 3 years should be at least **Rs. 60 Million**.

   4.3 Must have satisfactorily carried out at least one supply of skilled, semiskilled and unskilled workers contract to a Government Department/ Corporation/ University during the last 3 years for not less than **Rs. 20 Million**.

5. Interested bidders may obtain further information from Deputy Registrar, General Administration, University of Jaffna, and inspect the bidding documents at the same address on any working day during working hours.

   Contact numbers:- Tele: 0212226517, Fax:-0212226517

6. A complete set of Bidding Documents in English Language could be purchased by interested Bidders on submission of a written application to the Deputy Registrar, General Administration, University of Jaffna, Thirunelvely from 9.00 a.m. to 2.30 p.m. on any working day up to **02nd September 2021** upon the submission of receipt for the payment of non-refundable Tender Fee of Rs. 2500.00. The payment should be made in cash to the Shroff, University of Jaffna or the payment shall be deposited in favour of Bursar, University of Jaffna at the **People's Bank, University of Jaffna Branch Account** Number **162-1-001-6-0000880** at any Branch of People's Bank in Island wide.

7. Bidders are strongly advised to attend the Pre-bid meeting on 27th August 2021 at 10.00 a.m in the board room of the University of Jaffna and visit each location before pricing.

8. Bids shall be delivered or sent by registered post to the Deputy Registrar, General Administration, University of Jaffna, Thirunelvely, Jaffna P.O Box 57, to reach on or before **14.00 hrs on or before 06th September 2021** or be deposited in the tender box kept in the Office of the Registrar on or before the above date and time. Bids will be opened soon after closing the Bids in the presence of the bidders' representatives who choose to attend.

9. Bids shall be valid for a period of Days (should be as at 05th December 2021) from the date fixed for closing of bids or any extended period.

10. All bids shall be accompanied by a bid security for any which shall be;
    - In the form included with the Bidding document
    - In favour of Vice-Chancellor, University of Jaffna
    - For an amount of Rs.50,000.00 valid up to 03rd January 2022 (120 days from the date of closing of bid)
    - Issued by one of the agencies
      a. A bank operating in Sri Lanka;
      b. A bank based in another county by the guarantee "confirmed" by a bank operating in Sri Lanka;

(C-2521)

**Chairman**
**Procurement Committee, University of Jaffna** 14.08.2021

# கரவெட்டி பொதுச் சுகாதார பரிசோதகருக்கு தொற்று

யாழ்.கரவெட்டியில் பொதுச் சுகாதார பரிசோதகர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின்கீழ் பணியாற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவருக்கே கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் ஏற்கனவே கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பணியாற்றும் பொதுச் சுகாதார பரிசோதகர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில் இரண்டாவதாக கரவெட்டி பொதுச்சுகாதாரப் பணிமனையில் பணியாற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கே இவ்வாறு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது.

(ம-03)

## மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (7566)

☎-070 640 5951
e-mail : engchelvam@gmail.com

## காணி விற்பனைக்கு

பலாலி - யாழ்ப்பாணம் வீதியில் புன்னாலைக்கட்டுவன் வடக்குச் சந்தியில் இருந்து வடக்குப் பக்கமாக 500 மீற்றர் தூரத்தில் பிரதான வீதியின் மேற்குப் பக்கமாக உள்ள வீதியில் 4 ஆம் காணி **7 பரப்பு** உடன் விற்பனைக்கு உண்டு. (7632)

நேரடித் தொடர்பு:- 076 999 2016 | 077 323 7891

## துயர் பகிர்கின்றோம்



யா/ கோப்பாய் மகா வித்தியாலயத்தில் ஆசிரியையாக கடமையாற்றிவரும் திருமதி **மேரிலின்சியா மயூரன்** அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர்

**பொன்னையா இலட்சுமணலிங்கம்**

அவர்கள் கடந்த 31.05.2021 அன்று காலமானார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய நலன்புரிச் சங்கம்
யா/ கோப்பாய் மகா வித்தியாலயம் (7636)

## மதுரைஆதீன சுவாமிகள் இறைபதம் அடைந்தார்



(மதுரை)

மதுரை ஆதீனம் 292-ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் நேற்று இறைபதமடைந்தார்.

சிறந்த அறிவும் ஆற்றலும் மிக்க சுவாமிகள் சைவசமயத்தின் பாதுகாவலனாக விளங்கினார். அவரின் மறைவு சைவ உலகிற்கு பேரிழப்பாகும். (ம-03)

## கிழவன்காடு கலாமன்றத்தின் 31 ஆம் நாள் நினைவஞ்சலி



எமது கலாமன்றத்தின் சேவைக்கு பங்களிப்பு வழங்கிய

அமரர்

**தேவசேனா நாகலிங்கம்**
**( மாலா )**

அவர்களின் மறைவுத் துயருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை அவரது குடும்பத்தினருக்கு தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா எல்லாம்வல்ல ஈழத்துச் சிதம்பர தில்லைக்கூத்தன் திருவடியை அடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**கிழவன்காடு கலாமன்றம்** காரைநகர், யாழ். கிளை
நிர்வாக சபையினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள். (C-2519)

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் கிராம உத்தியோகத்தராக (J/408) கடமையாற்றும் திருமதி **விஜிதா சுதர்சன்** அவர்களின் அன்புத் தாயார்

அமரர் **மனோரஞ்சினி குமாரன்**

**தோற்றம் : 18.11.1963 மறைவு : 11.08.2021**

அவர்கள் 11.08.2021 புதன்கிழமை அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (C-2520)


பிரிவுத் துயருடன்...
பிரதேச செயலாளரும் அனைத்து உத்தியோகத்தர்களும், உளழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம் - பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரிழப்பு உச்சம் தொடும் நாட்டை முடக்குங்கள்!

## இலங்கையை எச்சரிக்கும் உலக சுகாதார அமைப்பு

**(கொழும்பு)**
**இலங்கையில் கொவிட்-19 தொற்று நோய் நெருக்கடி கட்டுப்பாடின்றி தற்போதுள்ள போக்கில் தொடருமானால் அடுத்த 5 மாதங்கள் 18,000 பேர் உயிரிழக்க நேரும் என உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.**




விசேட மருத்துவ நிபுணர்களின் பங்கேற்புடன் உலக சுகாதார அமைப்பின் இலங்கை அலுவலகத்தால் தயாரிக்கப்பட்ட அறிக்கையில் இவ்வாறு எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சுகாதார அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்நிலையில் அதிக உயிரிழப்புக்களைத் தவிர்த்து இலங்கையர்களைப் பாதுகாப்பதற்கான பரிந்துரைகளையும் இந்த அறிக்கையில் உலக சுகாதார அமைப்பு முன்வைத்துள்ளது.

பயணக் கட்டுப்பாடுகளை கடுமையாக்குதல், மாகாணப் பயணக் கட்டுப்பாடுகளுக்குப் பதிலாக மாவட்ட ரீதியில் பயணக் கட்டுப்பாடுகளை விதித்தல், குறுகிய காலத்திற்கு ஊரடங்கு உத்தரவு விதித்தல், அனைத்து பொது நிகழ்வுகளையும் மூன்று வாரங்களுக்குத் தடை செய்தல், பொதுக் கூட்டங்களை தடை செய்தல், சுகாதாரப் பணியாளர்களைப் பாதுகாத்தல், பயனுள்ள தகவல் தொடர்புத் திட்டங்கள் மூலம் பொதுமக்களுக்கு கொவிட்-19 தொற்று நோய் தொடர்பான விழிப்புணர்வூட்டல், இறப்பு தொடர்பான சரியான புள்ளிவிவரங்கள் வெளியிடுதல் மற்றும் 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் விரைவில் தடுப்பூசிபோடுதல் உள்ளிட்ட பரிந்துரைகள் அதில் அடங்குகின்றன.

இந்த அறிக்கை உலக சுகாதார அமைப்பு மற்றும் 30 இலங்கை வைத்திய நிபுணர்கள் அடங்கிய குழுவினரால் தொகுக்கப்பட்டது. (நி-5)

## தினசரி பதிவாகும் தொற்றாளர்களின் எண்ணிக்கை 6000ஐ தாண்டும்

### சுயாதீன சுகாதார விசேட நிபுணர்கள்

(கொழும்பு)
தற்போதுள்ளவாறு மக் கள் நடமாட்டம் தொடர்ந்தால் அடுத்த மாதமளவில் நாளாந்தம் பதிவாகும் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை ஆறாயிரத்தை கடக்கக் கூடும் என சுயாதீன சுகாதார விசேட நிபுணர்கள் குழு எதிர்வு கூறியுள்ளது.

ஒக்டோபர் மாதம் முதல் வாரத்திலிருந்து நாளாந்தம் 220 கொரோனா மரண ங்கள் பதிவாகக்கூடும் என அந்தக் குழு அனுமானிக் கிறது.

அடுத்த வருடம் ஜனவரி மாதமளவில் நாட்டின் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை சுமார் 30 ஆயிரமாக ஆக பதிவாக லாம்.

நான்கு வாரங்களுக்கு இறுக்கமான கட்டுப்பாடு களை அமுல்படுத்தினால் நாளா ந்தம் பதி வாகும் கொரோனா நோயாளர்களின் எண் ணிக் கையை மட்டுப்படுத்தலாம் என அவர்கள் குறிப்பிட்டுள் ளனர்.

இதன் மூலம் நாளாந்தம் பதிவாகும் மரணங்களின் எண்ணிக்கையையும் கட்டுப்படுத்தினால் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தலாம். இறுக்கமான கட்டுப்பாடுகள் மூலம் அடுத்த வருடம் ஜனவரி மாதமளவில் 18 ஆயிரம் மரண ங்களை தவிர்த்துக் கொள்ள முடியும் எனவும் அவர்கள் தெரி வித்தனர். (நி-5)

## உலகளவில் 15 ஆவது இடத்திற்கு முன்னோக்கி நகர்ந்த இலங்கை

(கொழும்பு)
இலங்கையில் கொரோனா மரணங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் சடுதியாக உயர்ந்துள்ளது.

இந்தநிலையில், உலக அளவில் கொரோனா விபரங்களை வெளியிடும் worldometers என்னும் இணையத்தளம் பல்வேறு நாடுகளிலும் இறக்கும் தொற்றாளர்களின் எண்ணிக்கையை அடிப்படையாக கொண்டு தரப்படுத்தலை வெளியிட்டுள்ளது. அதன்படி, கொரோனா மரணங்கள் அதிகம் இடம் பெறும் நாடுகள் பட்டியலில் உலக அளவில் இலங்கை 15வது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த தரப்படுத்தலில் இலங்கை நாளுக்கு நாள் முன்னோக்கி செல்கிறது. அத்துடன் ஆசிய வலயத்தில் இலங்கை 9வது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது. (நி-5)

## ஆட்பதிவு திணைக்கள சேவைகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)
ஆட்பதிவு திணைக்களத்தின் தலைமை மற்றும் பிராந்திய அலுவலகங்களால் வழங்கப்படும் அனைத்துப் பொதுமக்கள் சேவைகளும் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட உள்ளதாக ஆட்பதிவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொவிட் பரவல் நிலைமையைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கபட்டுள்ளதாக அத்திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (நி-5)




நல்லூர் கந்தசுவாமி கோவில் கொடியேற்றம் நேற்றுக் காலை பக்தி பூர்வமாக நடைபெற்றது. (படங்கள்:-சிவசாந்தன், ரவிசாந்)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் அணிக்கெதிரான முதல் டெஸ்டில் மே.தீவுகள் தடுமாற்றம்

மேற்கிந்திய தீவுகள் மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின் முதல்நாள் ஆட்டம், நிறைவுக்கு வந்துள்ளது.

இதன்படி முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிவரும் மேற்கிந்திய தீவுகள் அணி, நேற்று முன்தினம் ஆட்டநேர முடிவில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 2 ஓட்டங்களை பெற்றது.

ஆட்டநேர முடிவில் கிரைஜ் பிரத்வெயிட் ஒரு ஓட்டத்துடனும் ரொஸ்டன் சேஸ் ஓட்டமெதுவும் பெறாத நிலையிலும் களத்தில் இருந்தனர்.



முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணியின் முதல் இன்னிங்ஸ் ஓட்டங்களுடன் ஒப்பிடுகையில், மேற்கிந்திய தீவுகள் அணி, 215 ஓட்டங்கள் பின்னிலையில் உள்ளது.

ஜமைக்காவில் ஆரம்பமான இப்போட்டியில், நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, 217 ஓட்டங்களுக்கு சுருண்டது.


இதன்போது பாகிஸ்தான் அணி சார்பில் அதிகபட்ச ஓட்டங்களாக, அலாம் 56 ஓட்டங்களையும் பஷீம் அஷ்ரப் 44 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்துவீச்சில், ஜெய்டன் சீல்ஸ் மற்றும் ஹோல்டர் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும் ரோச் 2 விக்கெட்டுகளையும் மேயர்ஸ் 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி, நேற்றைய ஆட்டநேர முடிவில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 2 ஓட்டங்களை பெற்றுள்ளது.

கெய்ரன் பவல் மற்றும் போனர் ஆகியோர் ஓட்டமெதுவும் பெறாத நிலையில் ஆட்டமிழந்தனர். இந்த இரு விக்கெட்டுகளையும் மொஹமட் அப்பாஸ் வீழ்த்தினார். (4-6)

# வடகொரியாவில் ஒலிம்பிக் போட்டி ஒளிபரப்பினால் சர்ச்சை



2020 ஒலிம்பிக் போட்டிகளின் நிறைவு விழாவுக்கு இரு நாட்களின் பின்னர் டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளின் முதல் ஒளிபரப்பை வடகொரிய அரசு தொலைக்காட்சி சேவை ஒளிபரப்பியது.

வட கொரிய மத்திய தொலைக்காட்சி இங்கிலாந்து மற்றும் சிலிக்கு இடையிலான மகளிர் கால்பந்து போட்டியின் 70 நிமிடங்களை ஒளிபரப்பியது.

இந்த போட்டி உண்மையில் சில வாரங்களுக்கு முன்பு ஜூலை 21அன்று நடைபெற்றது.


தென்கொரிய யோன்ஹாப் செய்தி நிறுவனத்தின் தகவலின் படி, வட கொரியா அதன் தொடக்க விழாவிற்கு சில நாட்களுக்குப் பிறகு இந்த ஒலிம்பிக் போட்டிகளை ஒளிபரப்பியது.'

வர்ணனை இல்லாமல் மற்றும் குறைந்த தெளிவுத்திறனில் இந்த போட்டி ஒளிபரப்பப்பட்டது. காட்சிகள் எவ்வாறு பெறப்பட்டது என்பது தெளிவாகத் தெரியவில்லை.

கொரோனாவிலிருந்து தனது பிரஜைகளை பாதுகாப்பதற்காக 2020 டோக்கியோ விளையாட்டுக்கு வடகொரியா தனது பிரதிநிதிகளை அனுப்பவில்லை.

வடகொரியா தமது நாட்டில் கொவிட் தொற்று இல்லை என்று கூறுகிறது. ஆனால் இது சாத்தியமில்லை என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். (4-6)

# எவரெஸ்ட் பிரீமியர் லீக்கில் களமிறங்கும் சந்திமால்




நேபாளத்தில் நடைபெறவுள்ள எவரெஸ்ட் பிரீமியர் லீக் இருபது-20 போட்டிகளில் இலங்கை அணியின் விக்கெட் காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான தினேஷ் சந்திமால் விளையாடவுள்ளார்.

31 வயதான சந்திமால், பைரஹவா கிளாடியேட்டர்ஸ் அணியை பிரதிநிதித்துவப்படுத்தி ஆடுவார்.

இந்த தொடர் எதிர்வரும் செப்டம்பர் 25 முதல் ஒக்டோபர் 9 வரை கிரித்பூரில் உள்ள திரிபுவன் பல்கலைக்கழக சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறும். (4-6)

# கே.எல்.ராகுல் சதம் இந்தியா நிதான துடுப்பாட்டம்

இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 276 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

ஆட்டநேர முடிவில் கே. எல். ராகுல் 127 ஓட்டங்களுடனும் அஜிங்கியா ரஹானே ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

லண்டன்- லோட்ஸ் மைதானத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமான இப்போட்டியில், நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.



இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா அணி, நேற்றைய முதல் நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 276 ஓட்டங்களை பெற்றது.

இதன்போது இந்தியா அணி சார்பில், ரோஹித் சர்மா 83 ஓட்டங்களுடனும் புஜாரா 9 ஓட்டங்களுடனும் விராட் ஹோலி 42 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், ஜேம்ஸ் அண்டர்சன் 2 விக்கெட்டுகளையும் ஒல்லி ரொபின்சன் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர். (4-6)

# இலங்கையுடனான போட்டிக்கான தென்னாபிரிக்க அணி அறிவிப்பு

செப்டெம்பர் 02 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகும் இலங்கை அணியுடனான வரையறுக்கப்பட்ட ஓவர்கள் கொண்ட தொடருக்கான தமது அணியை தென்னாபிரிக்க கிரிக்கெட் நிர்வாகம் அறிவித்துள்ளது.

இந்த தொடருக்கான அணியின் தலைவராக தேம்பா பாவுமா நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கைக்கு சுற்றுப் பயணம்மேற்கொள்ளும் தென்னாபிரிக்க அணி மூன்று ஒரு நாள் மற்றும் மூன்று இருபது-20 போட்டிகளில் விளையாடவுள்ளது.

இப் போட்டிகள் அனைத்தும் கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நடைபெறவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடுமையான கட்டுப்பாடுகளுடன் நாட்டை 2 வாரங்கள் முடக்குங்கள்

## மருத்துவ சங்கத்தினர் ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

(கொழும்பு)

**நாட்டின் இக்கட்டான நிலையினை கருத்திற் கொண்டு குறைந்தபட்சம் 2 வாரங்களுக்கு ஏனும் நாட்டை முடக்கி கடுமையான கட்டுப்பாடுகளை பிறப்பிக்குமாறு இலங்கை மருத்துவ சங்கத்தினர் ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவிடம் வலியுறுத்தியுள்ளனர்.**

நாட்டின் தற்போதைய கொவிட்-19 அபாய நிலைமையை தெளிவுபடுத்திஇலங்கை மருத்துவ சங்கத்தினர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நேற்று அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்ட தெரிவித்தனர். அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

அத்தியாவசிய சேவைகள் மற்றும் தடுப்பூசி போடும் திட்டத்தை தடையின்றி பராமரிக்கும் அதே வேளையில் குறைந்தபட்சம் 2 வாரங்களுக்கு ஏனும் நாட்டை முடக்கி கடுமையான கட்டுப்பாடுகளை பிறப்பிக்க வேண்டும்.

மருத்துவமனைகள் கொவிட்-19 நோயாளிகளுக்கான இடத்தை முடிவில்லாமல் விரிவுபடுத்துவதால், ஏனைய நோய்களுக்கான சேவைகளும் கடுமையாக பாதிக்கப்படுகின்றன.

சுகாதாரப் பணியாளர்களிடையே தொற்றுநோய் பரவுவதால் சுகாதாரப் பணியாளர்கள் பற்றாக்குறை உள்ளனர். இவை அனைத்தும் கொவிட் மற்றும் கொவிட் அல்லாத நோயாளிகளுக்கு வழங்கப்பட்ட பராமரிப்பைப் பாதித்துள்ளன. இது முழு சுகாதார அமைப்பிலும் பாரிய தாக்கத்துக்கு வழிவகுக்கும் மற்றும் எதிர்காலத்தில் இறப்பு விகிதத்தை அதிகரிக்கும்.

கொவிட்- 19 நோயாளர்களின் எண்ணிக்கையை விரைவாகக் குறைக்க அவசர தேவை உள்ளது, மேலும் அது கடுமையான கட்டுப்பாடுகளினால் மாத்திரமே சாத்தியமாகும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

## அதிகளவான இலங்கையர்களுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்குங்கள்

### சவுதி அரேபியாவிடம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையர்களுக்கு அதிகளவான தொழில் வாய்ப்புக்களை வழங்குமாறு சவுதி அரேபியாவிடம் அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

சவுதி அரேபியாவின் வெளிவிவகார அமைச்சர் அடெல் பின் அஹமத் அல்-ஜுபைருடன் வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தன மெய் நிகர் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார். இதன் போது இவ்வாறு தெரிவித்தார். (நி-5)

## உள்நாட்டு சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்ட எந்தவொரு தொற்றாளரும் உயிரிழக்கவில்லை

### ஆயுர்வேத திணைக்களம்

(கொழும்பு)

உள்நாட்டு சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்ட எந்தவொரு கொரோனா தொற்றாளர்களும் உயிரிழக்கவில்லை என ஆயுர்வேத திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும் ஆயுர்வேத வைத்தியசாலைகளில் இதுவரை ஆயிரத்து 33 படுக்கைகள் தயார்ப்படுத்தப்பட்டுள்ளதாகவும், 835 பேர் தற்போது சிகிச்சைகளைப் பெற்று வருவதாகவும், ஆயுர்வேத ஆணையாளர் தம்மிக அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், இதுவரையான காலப்பகுதியில் மூவாயிரத்து 820 பேர் சிகிச்சை பெற்றுள்ளதாகவும், அவர்களில் இரண்டாயிரத்து 843 பேர், எந்தவித சிக்கல்களும் இன்றி குணமடைந்துள்ளதாகவும், அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி, 9 மாகாணங்களும் உள்ளடங்கும் வகையில், தொற்றாளர்களுக்கு சிகிச்சைகளை வழங்குவதற்கு ஆயுர்வேத நிலையங்கள் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில், கொரோனா தொற்றினால் பாதிக்கப்படுவோரை குணப்படுத்துவதற்காக, சுதேச வைத்திய மேம்பாடு, கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சினால் பல்வேறு வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதற்கமைய உள்நாட்டு வைத்தியத்தின் ஊடாக, கொரோனா தொற்றைக் குணப்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, ஆயுர்வேத ஆணையாளர் மேலும் குறிப்பிட்டார். (நி-5)

## கட்சித் தலைவர்களுக்கு அவசர அழைப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களுக்கு அவசர கூட்டத்துக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. நாளை மறுதினம் திங்கட்கிழமை சபாநாயகர் தலைமையில் கட்சித்தலைவர்கள்கூட்டம்இடம்பெறவுள்ளது.

தற்போதைய கொரோனா வைரஸ் தொற்று நிலைமையில் முன்னெடுக்கப்படக் கூடிய நடவடிக்கைகள் தொடர்பில் அதன் போது கலந்துரையாடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## தப்பித்துக் கொள்ள ஆற்றில் குதித்தவர் சடலமாக மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேசத்திலுள்ள பெண்டுகள்சேனை ஆற்றில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெண்டுகள் சேனை, பூலாக்காடு பகுதியிலுள்ள வயல் பகுதியில் மண் ஏற்றிச் சென்ற நிலையில், வயல் பகுதியில் நின்றோர் மண் ஏற்றியவர்களை துரத்தியபோது குறித்த இளைஞன் ஓடிச் சென்று அருகிலுள்ள ஆளமான ஆற்றில் குறித்துள்ளார். ஆற்றில் குதித்த இளைஞன் பின்னர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (நி-5)

## மணிவிழா வாழ்த்து

### திருமதி அம்பிகாவதி தவராசா

(பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியை)




யா/உடுத்துறை மகா வித்தியாலயம்
17.08.1988-31.12.1996
யா/செம்பியன்பற்று அ.த.க. பாடசாலை
01.01.1997-20.04.2000
கிளி/பிரமந்தனாறு மகா வித்தியாலயம்
24.04.2000-24.05.2002
யா/உடுத்துறை மகா வித்தியாலயம்
06.06.2002-11.08.2006
கிளி/புன்னைநீராவி மகா வித்தியாலயம்
04.09.2006-31.12.2007
யா/உடுத்துறை மகா வித்தியாலயம்
01.01.2008-13.10.2009
(பொறுப்பு அதிபர்)
யா/புற்றளை மகா வித்தியாலயம்
14.10.2009-13.08.2021

ஆரம்பக் கல்வியின் அதிபதியாய்
அன்புடன் மாணவரை அரவணைத்து
அறிவுரைகள் கூறியே கல்விதனை
அகமகிழ்ந்து ஊட்டிடும்
எங்கள் அம்பிகா ரீச்சர்
அகவை அறுபது கண்டு சேவையில்
நிறைவு கண்டு அகத்தினில் உறவு கண்டு
பல்லாண்டு வாழ வாழ்த்திடும் உள்ளங்கள்

பாடசாலைச் சமூகம்,
யா/புற்றளை மகா வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆலயத்திற்குள் வர பக்தர்களுக்கு அனுமதி இல்லை

## யாழ்.சிரேஷ்ர பொலிஸ் அத்தியட்சகர்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆலயத்திற்குள் வருவதற்கு எவருக்கும் அனுமதி இல்லை எனவே ஆலயத்திற்கு வருவதை தவிருங்கள் என யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லலித் லியனகே தெரிவித்தார்.

நல்லூர் உற்சவ பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவ்வாறு தெரிவித்தார்.


தற்போதுள்ள கொரோனா தீவிர நிலையில் ஆலயங்களில் திருவிழாக்கள் நடத்துவது. தொடர்பில் சுகாதார அமைச்சினால் சுற்று நிருபங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அந்த சுற்றி நிரூபங்களுக்கு அமைவாக யாழ்ப்பாண மாநகரசபை , ஆலய நிர்வாகம் மற்றும் பொலிஸார் இணைந்து ஆலய உற்சவத்தினை பாதுகாப்பான முறையில் எவ்வாறு நடத்துவது. தொடர்பில் கலந்தாலோசித்து சில முடிவுகளை எடுத்துள்ளோம்.

அந்த முடிவின் பிரகாரம் நல்லூர் ஆலய வளாகத்திற்குள் பக்தர்கள் எவரும் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.

எனவே பொதுமக்கள் தற்போதுள்ள தொற்று நிலைமையினை கருத்திற்கொண்டு ஆலயத்துக்கு வருவதை தவிர்த்து கொள்ளுங்கள்.

வீடுகளில் இருந்தவாறு நேரடியாக ஒளிபரப்பப்படும் ஆலய உற்சவத்தை தரிசியுங்கள் என மேலும் தெரிவித்தார்கள். (4-8-18-33)




## கந்தனே போற்றி போற்றி

நல்லையின் நாயகனே கந்தவேல் மூர்த்தியே
தொல்லையில்லா வாழ்வு தரும் கடம்பனே
கொள்ளை நோய் தன்னை தீர்த்து
குவலயம் காத்து அருள வேண்டுகிறேன்

ஆறுமுகமும் ஆறு பொருள் தரவே
ஆறுதல் வாழ்வு அளிக்கும் வேலவனே
அப்பனே கந்தனே சரணம் சரணம்
அழகிய வேலவனே உன்னடி சரணம்

உன்னை நினைத்து உருகிட அருள்பவனே
உலகை காத்தருளும் கந்தனே சரணம்
அற்புத வேலவனே போற்றி போற்றி
அலங்காரக் கந்தனே போற்றி போற்றி

**அரியாலையூர் யசிதீபன்**

## தனிமைப்படுத்தலில் வடக்கு சுகாதார பணிப்பாளர்

(கரணவாய்)

வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் சுயதனிமைப் படுத்தலில் உள்ளார்.

வடமாகாண பிரதம செயலாளர் சமன் பந்துல சேனாவிற்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து அவருடன் அவரின் அலுவலகத்தில் கலந்துரையாடல் மேற்கொண்ட வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் பா.செந்தில்நந்தன் ஆகியோரும் சுய தனிமைப் படுத்தலில் வைக்கப்பட்டுள்ளனர். (4-8-60)

## இணையவழி நினைவுதின நிகழ்வு

(கரணவாய்)

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி இ.மு.வி. நாகநாதனின் 50 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு நினைவுகூரும் நிகழ்வு நாளை 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு செல்வநாயகம் நினைவு அறக்கட்டளை அறங்காவலர் ஆர்.பேரின்பநாயகம் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வு **Thanthai Chelva Auditorium https://www.youtube.com/channel/ UCajV6W14qF5T08Eaa7pHltw** எனும் You tube தளத்திலும். **Chelvanayakam Memorial Trust - https://www. facebook.com/chelvanayakammemorialtrust/** எனும் முகநூல் தளத்திலும் பார்வையிட முடியும் எனவும் அறிவித்துள்ளனர். (4-8-60)



வேலணை வடகிழக்கு பகுதியில் இரண்டு கடற்பண்ணைகள் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் கடந்த 11 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

(படம்:கஜிந்தன்)

## நல்லைக் குமரனைப் பாடுங்கடி

கந்தவடி வேலவனைப் பாடுங்கடி -நிதம்
கயமை கலைத்திடக் கூடுங்கடி!
செந்தமிழ் ஓங்கிடப் பாடுங்கடி - எங்கும்
செழுமை செழித்திட வேண்டுமடி!

செல்வம் செழித்திட வேண்டுமடி-என்றும்
சீர்த்தி சிலிர்த்திட வேண்டுமடி!
கல்வி உயர்ந்திட வேண்டுமடி-நாளும்
கயமை கலைந்திட வேண்டுமடி!

உள்ளம் உயர்ந்திட வேண்டுமடி -எங்கும்
ஊனம் ஒழிந்திட வேண்டுமடி
கன்னம் கருகிட வேண்டுமடி - நாட்டில்
களனி கதிர்விட வேண்டுமடி!

நல்லைக்குமரனைப் பாடுங்கடி - நாளும்
நாதம் நயந்திட வேண்டுமடி!
தொல்லை துடைத்திடப் பாடுங்கடி - நாளும்
நாதம் நயந்திட வேண்டுமடி!

**கலாபூஷணம் கலாமாமணி**
**யாழ்முத்து, கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்**

## கட்டாக்காலி ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி கமநல சேவைகள் நிலைய அதிகாரி பிரிவிற்குட்பட்ட கரணவாய் வடக்கு கமக்கார அமைப்பு பிரிவில் தொடர்ச்சியாக பயிர்ச் சேதங்களை ஏற்படுத்தி வந்த கட்டாக்காலிமாடொன்று (வெள்ளை நிற பசு மாடு) கமக்கார அமைப்பினால் பிடிக்கப்பட்டு அதனை எவரும் உரிமை கோரப்படாத நிலையில் இருப்பதனால் நாளை மறுதினம் திங்கட்கிழமை மு.ப 10.00 மணிக்கு கரணவாய் வடக்கு பொதுநோக்கு மண்டபத்தில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் ஏலமிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.(4-8-60)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமானதொரு வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசிவேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் தென்மராட்சி மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி அம்மன் தேவஸ்தான பிரதம குருக்கள் கிரியாஜோதி சிவஸ்ரீ.ந. மகேஸ்வரக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது. (4-6-6)

## கந்தனை போற்றுகின்றேம்

உலகெங்கும் கொரோனா
உச்சம் தொட்டுள்ள வேளையில்
உம் பாதம் நாடமுடியாத நிலையில்
உள்ளத்தால் உம்மை போற்றுகின்றோம்
உருவாகிய இக் கொடிய நோய்
உலகில் நின்று நீங்கிட
உம்மிடம் பிரார்த்திக்கின்றோம்

**கரிகாலன்**
**ஊரெழு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பூசி செலுத்திக் கொண்டால் உயிர் பிழைக்கும் வாய்ப்பு அதிகம்

## தாமதிக்காது தடுப்பூசி செலுத்துங்கள்– பேராசிரியர் நீலிகா மாலவிகே

(கொழும்பு)

**கொவிட் -19 தடுப்பூசிகள் நோயெதிர்ப்பு செயற்பாட்டில் சிறப்பாக உள்ளன. இது டெல்டாவால் ஏற்படும் கடுமையான விளைவுகளைக் கூட குறைப்பதுடன், மரணங்களைத் தடுப்பதிலும் சிறப்பான பங்களிப்பை வழங்குகிறது என ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு அறிவியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் நீலிகா மாலவிகே தெரிவித்துள்ளார்.**

நாளை என இனியும் காத்திருக்க வேண்டாம். தயவு செய்து இன்றே தடுப்பூசியை உடனடியாகப் போட்டுக்கொள்ளுங்கள் எனவும் நேற்றுக் காலை தனது டுவிட்டரில் அவர் பதிவிட்டுள்ளார்.

உங்களுக்கு நீரிழிவு, இருதய நோய், சிறுநீரக நோய் இருந்தால் கூட தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள அஞ்ச வேண்டாம். ஏனெனில் ஏனையவர்களை விட கொவிட் 19 ஆல் இவ்வாறானவர்களுக்கே ஆபத்து அதிகம். இவ்வாறானவர்களே அனைவருக்கும் முன்னர் தடுப்பூசிகளைப் போட்டுக் கொள்ள வேண்டும் எனவும் அந்தப் பதிவில் பேராசிரியர் நீலிகா மாலவிகே அறிவிறுத்தியுள்ளார்.

உங்களுக்கு ஒவ்வாமை, ஆஸ்துமா உள்ளிட்ட நாட்பட்ட நோய்கள் இருந்தாலும் தடுப்பூசி பெறத் தயங்க வேண்டாம். மருத்துவர்களின் மேற்பார்வையின் கீழ் தயவுசெய்து தடுப்பூசி எடுத்துக் கொள்ளுங்கள்.

உங்கள் வீட்டில் அனைவரும் தடுப்பூசி போட்டுவிட்டார்கள். நீங்கள் வெளியே செல்வதில்லை என்ற காரணத்தால் பாதுகாப்பாக இருப்பதாகக் கருதி தடுப்பூசி போட்டுக் கொள்ளாமல் இருந்து விடாதீர்கள். தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களும் மீண்டும் தொற்றுக்குள்ளாகும் சந்தர்ப்பம் உள்ளது.

அவர்களுக்கு தொற்று இருப்பதற்கான அறிகுறிகள் இல்லாமல் தொற்றைப் பரப்புபவர்களாக இருப்பார்கள். ஆனால் அவர்கள் உயிர் பிழைக்கும் வாய்ப்பு அதிகம். நீங்கள் தடுப்பூசி போடவில்லை என்றால் உயிரிழக்கும் வாய்ப்பு அதிகம் எனவும் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு அறிவியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் நீலிகா மாலவிகே எச்சரித்துள்ளார். (நி-5)




# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1975இந்து<br>நட்சத்திரம்:சதயம்<br>கி.பா:26 செவ் 6 சூரி 11ல்<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்: லண்டன் கடை PRஉண்டு<br>எதிர்பார்ப்பு:உள்நாடு , வெளிநாடு<br>தொ.இ: B/3004 | பிறப்பு: 1987இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 15செவ் 10சூரி9 ல்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில்:. O/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/6835 |
| பிறப்பு:1973 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 29 ½செவ் 8 சூரி3 ல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:Software Engineer<br>எதிர்பார்ப்பு:அரச,தனியார் வேலை<br>தொ.இ: B/3012 | பிறப்பு:1993இந்து<br>நட்சத்திரம்:பூசம்<br>கி.பா: -செவ்,சூரி9 ல்<br>உயரம்:- --<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/6836 |
| பிறப்பு:1983 இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை<br>கி.பா:65செவ் 12 சூரி 1 ல்<br>உயரம்:5'2"<br>தகைமை/தொழில்: A/L. உள்ளூர் ஆட்சி அலுவலகம்<br>எதிர்பார்ப்பு:அரச தொழில்.சைவபோசனம்<br>தொ.இ: B/3056 | பிறப்பு:1986 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா:58செவ்7 சூரி 10ல்<br>உயரம்:165cm<br>தகைமை/தொழில்:NDT,பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு:பொறியிலாளர் பட்டதாரி. உள்நாடு,வெளிநாடு<br>தொ.இ:G/6858 |
| பிறப்பு:1982 இந்து<br>நட்சத்திரம்:சுவாதி<br>கி.பா: 20செவ் 5சூரி2ல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்:A/L CIMA,Building Contract Own<br>எதிர்பார்ப்பு:படித்த அழகிய பெண்<br>தொ.இ: B/3057 | பிறப்பு:1972 இந்து<br>நட்சத்திரம்:ரோகிணி<br>கி.பா:23 ½ செவ்,சூரி 2ல்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்:MSCஅவுஸ்திரேலியா<br>எதிர்பார்ப்பு:விஞ்ஞான பட்டதாரி<br>தொ.இ:G/6902 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# கடமை முடிந்து வீடு திரும்பிய பொலிஸ் அதிகாரி திடீர் மரணம்

(கொழும்பு)

புத்தளம் ஆனமடுவை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் திடீரென ஏற்பட்ட சுகவீனம் காரணமாக உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆனமடுவை வல்பாலுவ பிரதேசத்தை சேர்ந்த 69 வயதுடைய பொலிஸ் அதிகாரியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடமை முடிந்து வீட்டுக்கு சென்ற இந்த அதிகாரிக்கு திடீரென சுகவீனம் ஏற்பட்டுள்ளது.

குடும்பத்தினர் அவரை உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

உயிரிழந்த பொலிஸ் அதிகாரியின் உயிரியல் மாதிரிகள் கொண்டு பரிசோதனை நடத்த மருத்துவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர். இந்த அறிக்கை கிடைத்த பின்னர் பிரேதப் பரிசோதனை நடத்தப்படவுள்ளது. (நி-5)


## Immediate Vacancy
## Project coordinator

The Community Association for Child Protection and Development CACPD-ITHAM is a non-profit, organization engaged in humanitarian work. Social transformation through holistic development.

**Job Location:** Chankanai DS Division **Contract: 12 Months**

**Knowledge and Skills:**

- Relevant academic background
- At least 3 years' experience working in the field along with Disability, Children, youth and Community Development aspects.
- Excellent Report writing skill in English
- Computer skills and IT Knowledge
- Driving license - Type AD license (motor bike) is essential

**CACPD is an equal opportunity employer**

Remuneration is negotiable & will depend on qualification and experience. Interested candidates should forward their **complete resume and a motivation letter** with contact details along with two referees to reach us on or before 20.08.2021. Only shortlisted candidates will be notified.

Email: managementitham2012@outlook.com
Post mail: ITHAM CACPD, Dutch Road, Siththankerny.
(7630)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரித்து வரும் தொற்றாளர்கள் இரண்டாவது விடுதியும் நிரம்பியது!

## வவு.வைத்தியசாலை பணிப்பாளர் எச்சரிக்கை

(நெளுக்குளம்)

**வவுனியா மாவட்டத்தில் கொரோனா நோயாளர்கள் அதிகரித்து இரண்டாவது விடுதியும் கொரோனா நோயாளர்களால் நிரம்பியுள்ளதாக வவுனியா பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி க.ராகுலன் தெரிவித்தார்.**

இவ் விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா பொது வைத்தியசாலையில் நாளுக்கு நாள் கொரோனா தொற்றாளர்கள் அதிகரித்து வரும் நிலையில் முதலாவது கொரோனா தொற்றாளர் விடுதி அண்மையில் நோயாளர்களால் நிரம்பியமையால் இரண்டாவது நோயாளர் விடுதியும் கொரோனா நோயாளர்களுக்காக திறக்கப்பட்டது.

தற்போது அந்த விடுதியும் நிரம்பியுள்ள நிலையில் வவுனியா மாவட்டத்தை சேர்ந்த 60 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் மாவட்ட பொது வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களில் நால்வர் அதி தீவிர சிகிச்சை பிரிவிலும் 20 பேர் தீவிர சிகிச்சை பிரிவில் ஒட்சிசன் தேவையுடையோராகவும் காணப்படுகின்றனர்.

நாட்டில் கொரோனா மரணங்களும் தொற்றாளர்களும் அதிகரித்து வரும் நிலையில் வவுனியா மக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டிய நிலையில் உள்ளனர்.

மேலும், வவுனியா வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதியர்கள் உட்பட சுகாதார உத்தியோகத்தர்களும் கொரோனா தொற்றுக்குள்ளாவதால் வைத்தியசாலை "நிர்வாக இரட்டை கடின நிலையை" எதிர் நோக்கியுள்ளது.

இவ்வாறான சூழலில் மக்கள் தம்மை தாமே பாதுகாத்து கொள்வதுடன் வவுனியா மாவட்டத்தில் நோயாளர் அதிகரிப்பைக் கட்டுப்படுத்த கடும் பிரயத்தனம் மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டார். (4-8-6-299)

# காலநிலை அவதான நிலையம் அமைக்கப்பட வேண்டும்

## பிரதேசசபை உறுப்பினர்

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் "காலநிலை அவதான நிலையம்" ஒன்று அமைக்கப்பட வேண்டும் என கரைதுறைபற்று பிரதேச சபை உறுப்பினர் த.அமலன் கோரிக்கை விடுத்துள்ளார்.

முல்லைத்தீவின் கரைதுறைப்பற்று பிரதேச சபையினுடைய 39 ஆவது அமர்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இவ் அமர்வின் போதே இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் "காலநிலை அவதான நிலையம்" ஒன்று அமைக்கப்பட வேண்டும். ஏனெனில் முல்லைத்தீவு மாவட்டம் விவசாயத்தினையும் மீன்பிடியினையும் வாழ்வாதாரமாக கொண்ட மாவட்டம்.

இவ் இரு தொழில்களுக்கும் காலநிலையினை அவதானித்து முன்கூட்டியே மக்களிற்கு தகவல்களினை வழங்குவது அவசியம் எனக் குறிப்பிட்டு அதற்கான காரணங்களினையும் குறிப்பிட்டு தீர்மானம் உறுப்பினர் த.அமலனினால் கொண்டு வரப்பட்டது. இதனை சபை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது. (4-8-350)



'நாட்டை கட்டியெழுப்பும் சுவீட்சத்தின் நோக்கு - அனைவருக்கும் குடிநீர்' திட்டத்தின் கீழ் வவுனியாவில் நீர் விநியோக குழாய் பதிக்கும் திட்டம் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (படம்:-சதீஸ்)



முல்லைத்தீவு மாவட்டத்தில் வசிக்கும் வறிய குடும்பங்களுக்கு இராணுவத்தினரால் மருத்துவ உபகரணங்கள் மற்றும் சக்கர நாற்காலி என்பன நேற்று வழங்கி வைக்கப்பட்டன. (படம்:-யதுபாஸ்கரன்)

# இந்துபுரம் வீதியினை புனரமையுங்கள் பிரதேச சபை உறுப்பினர் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு இந்துபுரம் பிரதான வீதியை புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என திருமுறிகண்டி வட்டார பிரதேச சபை உறுப்பினர் செ.பிறேமகாந் கோரிக்கை விடுத்துள்ளார்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபை அமர்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இவ் அமர்விலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

திருமுறிகண்டி வட்டாரத்திற்குட்பட்ட இந்துபுரம் கிராமத்திற்கான பிரதான வீதியானது நீண்டகாலமாக புனரமைக்கப்படாது இருப்பதனால் அப்பகுதியில் வசிக்கும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதனால் குறித்த வீதியினை புனரமைப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

குறித்த வீதியானது உலக வங்கியின் LDSP திட்டத்தின் கீழ் பிரதேச சபைக்குட்பட்ட மக்களின் தெரிவில் இரண்டாவது தெரிவாக இருந்தபோதிலும் குறித்த வீதியானது இன்றுவரை புனரமைப்பு நடைபெறுவதற்கான ஒழுங்குகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே குறித்த வீதியை புனரமைப்பு செய்வதற்கு முன்னுரிமை வழங்குமாறு சபை உறுப்பினர் பிறேமகாந் பிரேரணை முன்மொழிவு செய்யப்பட்டதனை தொடர்ந்து சபையின் முன்னுரிமையினை குறித்த வீதிக்கு வழங்கி புனரமைப்பு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.(4-8-350)

# இரவில் யானை தொல்லை பகலில் குரங்கு தொல்லை

(கண்டாவளை)

இரவுவேளைகளில் காட்டு யானைகளின் தொல்லையினையும் பகல் வேளைகளில் குரங்குகளின் தொல்லைகளையும் அனுபவித்து வருவதாக முல்லைத்தீவு முத்து ஐயன் கட்டுப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு முத்து ஐயன் கட்டு பிரதேசத்தில் காட்டு யானைகளின் தொல்லை மற்றும் குரங்குத்தொல்லை என்பன அதிகரித்துக்காணப்படுவதாகவும் இதனால் விவசாயிகள் முதல் சாதாரண மக்கள் வரை பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.

அதாவது, பகல் வேளைகளில் குரங்குகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது. விவசாயப்பயிர்ச் செய்கைகளை அழித்து வருவதுடன் வீடுகளுக்குள்ளும் புகுந்து சேதங்களை ஏற்படுத்தி வருகின்றன.

இதே போன்று இரவுவேளைகளில் காட்டு யானைகளின் தொல்லையும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

மாலையானதும் ஊர் மனைகளுக்குள் வருகின்ற யானைகள் கடும் சேதங்களை ஏற்படுத்திவருகின்றன.

இவ்வாறு காட்டுயானைகளின் தொல்லையினாலும், குரங்குகளின். தொல்லையினாலும் தாங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும் சில வேளைகளில் உயிராபத்துக்களை எதிர்கொள்கின்ற நிலைமை காணப்படுவதாகவும் மேற்படி பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (4-6-315)



# கனரக வாகனத்தை திருத்தித் தாருங்கள்

## பிரதேச சபையில் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் மோட்டார் கிறேடர் கனரக வாகனம் விரைவில் திருத்தம் செய்யப்படவேண்டும் என நேற்று முன்தினம் சபை அமர்வில் கோரிக்கை விடுக்கப்பட்டது. புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் மோட்டார் கிறேடர் வாகனமானது நீண்டகால மாக திருத்தம் மேற்கொள்வதற்கு உரிய நிறுவனத்தாருக்கு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் இன்றுவரை திருத்தம் மேற்கொள்ளாது காண ப்படுகின்றது. இதனால் மக்களுக்கு சேவையை வழங்க முடியாது இருப்பதுடன் சபைக்கு வருமான இழப்பும் ஏற்பட்டு வருகின்றது. எனவே இவ்விடயம் தொடர்பாக விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என சபை உறுப்பினர் செ.பிறேமகாந் கோரிக்கை விடுத்துள்ளார். (4-6-350)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராசிபலன்

14.08.2021
ஆடி 29, சனிக்கிழமை
சஷ்டி பிற்பகல் 12.22 மணிவரை
சித்திரை முற்பகல் 8.12 மணிவரை
சுபநேரம் -3.05-4.35 மணிவரை
இராகு காலம் 9.05-10.35 மணிவரை
சந்திராஷ்டமம்- ரேவதி
சுந்தரர் குருபூசை

வளவன்

**மேஷம்** — மறக்க முடியாத இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, உடல் நலன் சீராகும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**ரிஷபம்** — குடும்பத்தில் சுகங்களும், சந்தோசங்களும் கிடைக்கும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்** — நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், நன்மைகள் நடைபெறும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கடகம்** — புதிய நண்பரின் அறிமுகம் கிடைக்கும், தேவைகள் பூர்த்தியாகும் நாள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**சிம்மம்** — உறவு பகை பாராமல் உதவும் நாள், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், சுபகாரியப் பேச்சுக்களில் ஆர்வம் கூடும்.

**கன்னி** — குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள், தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், வாக்கு மேன்மையுண்டு.

**துலாம்** — உடல் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ் நிலை உருவாகும், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** — குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களை நிறைவேற்ற சற்று அலைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**தனுசு** — பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மகரம்** — செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், வருமானம் திருப்திகரமானதாக அமையும், எண்ணிய காரியம் எளிதில் கைகூடும்.

**கும்பம்** — நேற்றைய பணியொன்று இன்னும் தொடரலாம், பேச்சைக்குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், உறவினர்களிடையே ஏற்பட்ட மனக்கசப்புக்கள் மாறும்.

**மீனம்** — திடீர் செலவுகள் ஏற்படலாம், குடும்பத்தினரிடையே சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், தேகநலனில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

சினம் கூர்மையான கத்தி போன்றது

# 550 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுதானியச் செய்கை

(கண்டாவளை)

**முல்லைத்தீவு துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கீழ் 550 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுதானிய செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கமநல சேவை நிலையத்தின் உத்தியோகத்தர் த. பிரியதர்சினி தெரிவித்தார்.**

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள பாரிய மற்றும் நடுத்தர குளங்களில் இவ்வாண்டு 2778 ஏக்கர் நிலப்பரப்பிலும் அதேபோல சிறு குளங்களில் 154 ஏக்கர் நிலப்பரப்பிலும் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள அதேநேரம் 550 ஏக்கர் நிலப்பரப்பில சிறுதானிய செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கமநல சேவை நிலையத்தின் உத்தியோகத்தர் த. பிரியதர்சினி தெரிவித்தார்.

கல்விளான்,யோகபுரம் கிழக்கு, யோகபுரம் மத்தி,துணுக்காய், தேறாங்கண்டல்,ஆலங்குளம், ஐயன்குளம் ஆகிய பகுதிகளில் நிலக்கடலை, உழுந்து, பயறு, கௌப்பிபோன்றபயிர்கள் இவ்வாறு பயிரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-8-315)

# நீதிமன்றில் முற்படுத்த அழைத்து செல்லப்பட்ட இருவருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்த அழைத்துச் செல்லப்பட்ட சந்தேக நபர்கள் இருவருக்கு சுகயீனம் காரணமாக உடனடியாக மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் இருவருக்கும் கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வல்வெட்டித் துறை பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் மோதலில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் நேற்று 6 பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் 6 பேரும் நேற்று பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்த அழைத்துச் செல்லப்பட்டனர்.

அவர்களில் இரண்டு பேர் நீதிமன்ற வளாகத்தில் திடீர் சுகயீனம் எனத் தெரிவித்தனர். அவர்கள் இருவரும் உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

(4-8-33)

# அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையில் கூட்டமைப்பு பின்னிற்கப்போவதில்லை

(மன்னார்)

தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கும் அரசாங்கத்திற்கும் இடையில் பேச்சுவார்த்தை இடம் பெற வேண்டுமாக இருந்தால் நிபந்தனையின் அடிப்படையில், ஒரு நல்லெண்ண முயற்சியாக அமைய வேண்டும் என தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார். மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் தேசியக்கூட்டமைப்பு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை மேற்கொள்வதற்கு பின்னடைவை எதிர்நோக்க போவதில்லை. ஆனால் கடந்த கால அனுபவத்தை வைத்துக் கொண்டு நாங்கள் அரசுக்கு சில நிபந்தனைகளை விதிப்பதன் ஊடாக,அரசாங்கம் எங்களுடன் பேசுவதற்கு ஒரு நல்லெண்ண முயற்சியாக சில விடயங்களை முதலிலே மேற்கொள்ள வேண்டும்.

13 ஆவது திருத்தச்சட்டத்தில் மாகாணசபை முறைமையை இருக்கிற அதிகாரங்களுடன் செயற்படுவதற்கான ஆணையை அரசாங்கம் பிறப்பிக்க வேண்டும். அரசியல் கைதிகள் குறைந்த எண்ணிக்கையில் இருக்கிறார்கள். அவர்களை நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும். நில அபகரிப்பு தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

அபகரித்த நிலங்களை விட்டுக் கொடுக்கும், நிலையை ஏற்படுத்த வேண்டும் என்பது எமது கோரிக்கையாக உள்ளது என மேலும் தெரிவித்தார். (4-8-285)



மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தினால் மன்னார் தாராபுரம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா தனிமைப்படுத்தல் நிலையத்திற்கான ஒரு தொகுதி சுகாதார பொருட்கள் மன்னார் மாவட்ட செயலகத்திடம் நேற்று ஒப்படைக்கப் பட்டது. (படம்-ஜோசப்நயன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் கொரோனா கட்டுப்பாட்டில் உள்ளதால் ஆசிய நாடுகளில் தொற்று பரவல் குறைந்துள்ளது

## உலக சுகாதார அமைப்பு

(ஜெனீவா)

**இந்தியாவில் கொரோனா தொற்று கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளதால் தென்கிழக்கு ஆசியப் பகுதியில் கொரோனா தொற்று எண்ணிக்கை குறைந்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.**

World Health Organization

இது குறித்து உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள வாராந்த அறிக்கையில், "தென்கிழக்கு ஆசிய நாடுகளில் கடந்த வாரம் சுமார் 7 இலட்சத்து 99 ஆயிரம் பேருக்கு புதிதாக கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

இது முந்தைய வாரத்தை விட 5 சதவீதம் குறைவாகும்.

இந்தியாவில் புதிய கொரோனா தொற்று தொடர்ந்து நிலைத்தன்மையுடன் இருந்தது.

மேலும் இந்தோனேசியா, மியன்மார் ஆகிய நாடுகளில் கடந்த மாதம் தினசரி கொரோனா தொற்று குறைந்து வருகிறது.

இந்தக் காரணங்களால் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் புதிதாக கொரோனாவால் பாதிக்கப்படுவோரின் ஒட்டுமொத்த எண்ணிக்கை கடந்த வாரம் குறைந்துள்ளது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-5)

## வரலாறு காணாத மழையால் சீனாவில் 21 பேர் பலி

(பீஜிங்)

சீனாவில் கடந்த சில தினங்களாக வரலாறு காணாத அளவுக்கு பருவமழை பெய்து வருகிறது. குறிப்பாக நேற்று முன்தினம் சீனாவின் மத்திய மாகாணங்களில் மிக பலத்த மழை பெய்தது. ஹூபெய் மாகாணம வெள்ளத்தில் மூழ்கி உள்ளது. இந்த மாகாணத்தில் உள்ள மக்கள் வெள்ளத்தில் சிக்கி உள்ளனர்.

8 ஆயிரம் பேர் ஆபத்தான பகுதியில் இருந்து மீட்கப்பட்டு உள்ளனர். பலத்த மழை காரணமாக 21 பேர் பலியாகி உள்ளனர்.

4 பேர் மாயமாகிவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஒரு மாதமாக சீனாவில் பெய்து வரும் பலத்த மழைக்கு 300 க்கும் மேற்பட்டவர்கள் பலியாகி இருப்பது குறிப்பிடத்தக்கது. (8-5)


## சீனாவில் நிலநடுக்கம்

(பீஜிங்)

சீனாவின் கிங்ஹாய் மாகாணத்தில் நேற்று வெள்ளிக்கிழமை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ரிக்டர் அளவுகோலில் 5.8 ஆகப் பதிவான நிலநடுக்கமானது வடமேற்கு பகுதியில் 8 கி.மீ ஆழத்தில் உணரப்பட்டது. (8-5)

# இயற்கை அன்னையின் சீற்றத்தில் துருக்கி காட்டுத் தீயைத் தொடர்ந்து வெள்ளத்தால் பேரழிவு



(அங்காரா)

துருக்கியின் கருங்கடல் பிராந்தியத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில் சிக்கி 17 பேர் உயிரிழந்தனர்.

பெரும் காட்டுத் தீயைத் தொடர்ந்து இந்த மாதம் நாட்டைத் தாக்கிய இரண்டாவது பாரிய இயற்கை பேரழிவாக இது அமைந்துள்ளது.

கடந்த இரு வாரங்களாக துருக்கியின் தெற்கு கடலோரப் பகுதிகளில் காட்டுத் தீ பேரழிவுகளை ஏற்படுத்தியது. இந்தக் காட்டுத் தீ பெரும்பாலும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டதாக அதிகாரிகள் நேற்று முன்தினம் அறிவித்த நிலையில் வெள்ளத்தால் மற்றொரு பெரும் அழிவை நாடு சந்தித்துள்ளது. கடந்த இரு வாரங்களாக துருக்கியில் பற்றியெரிந்த காட்டுத் தீயால் 8 பேர் உயிரிழந்தனர். அத்துடன், பல்லாயிரக் கணக்கான ஹெக் டேயர் காடுகள் தீயில் கருகி அழிந்தன. இந்நிலையிலேயே வெள்ளத்தால் மற்றொரு அழிவு ஏற்பட்டுள்ளது. கஸ்டமோனு மாகாணத்தில் மட்டும் வெள்ளத்தில் சிக்கி 15 பேர் உயிரிழந்தனர். சினோப்பில் இரண்டு பேர் இறந்தனர். வெள்ளத்தில் மேலும் பலர் சிக்கியிருக்கலாம் எனக் கருதப்படுவதால் தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து 1,400 க்கும் மேற்பட்ட மக்கள் வெளியேற்றப்பட்டனர். மோசமான இடங்களில் சிக்கியிருந்த சிலர் ஹெலிகொப்டர்கள் மற்றும் படகுகளின் உதவியுடன் வெளியேற்றப்பட்டனர்.

கடந்த இரு வாரங்களாக தென்மேற்கு மாகாணங்களில் 299 இடங்களில் காட்டுத் தீ பற்றி எரிந்த நிலையில் துருக்கி அதன் வரலாற்றில் சந்தித்த மோசமான காட்டுத் தீ பேரழிவு இது என ஜனாதிபதி தயிப் எர்டோகன் கருத்து வெளியிட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (8-5)

**உலகளவில் கொரோனா**

**உயிரிழப்பு :-4 354 205**

**தொற்று :-206 598 452**

(நேற்றைய மாலை நிலைவரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

## வட இந்தியாவில் சீரற்ற காலநிலை 71 பேர் உயிரிழப்பு

(சென்னை)

வட இந்தியாவில் பல மாநிலங்களில் வெள்ளம் மற்றும் மின்னல் தாக்கத்தின் காரணமாக 71 பேர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக இமாச்சலப் பிரதேசத்தின் பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. அதேபோல் மின்னல் தாக்கத்தினால் இரு சிறுவர்கள் உள்ளிட்ட 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், உத்தரப்பிரதேசத்திலும், மின்னல் தாக்கத்தினால் 42 பேர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் அலகாபாத்தில் 14 பேரும், ஜெய்ப்பூரில் 12 பேரும் உள்ளடங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-5)

## தீவிரவாதி சுட்டுக்கொலை காஷ்மீரில் பரபரப்பு

(ஜம்மு)

ஜம்மு காஷ்மீர் பகுதியில் தீவிரவாதி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். காஷ்மீரின் குல்கம் மாவட்டத்தில் இருக்கும் தேசிய நெடுஞ்சாலையில் பாதுகாப்பில் இருந்த வீரர்கள் மீது நேற்று முன்தினம் அடையாளம் தெரியாத தீவிரவாதிகள் தாக்குதலில் ஈடுபட்டனர்.



இதில் பாதுகாப்புப் படை வீரர்கள் யாருக்கும் பெரிய காயங்கள் ஏற்படவில்லை. இந் நிலையில் அங்கு பொலிஸார் மற்றும் பாதுகாப்புப் படைவீரர்கள் இணைந்து நடத்திய தேடுதலில் தீவிரவாதிகள் பதுங்கியிருந்த இடத்தை கண்டுபிடித்து தாக்குதல் நடத்தினர்.

இதில் ஒரு தீவிரவாதி சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் பாதுகாப்புப் படை வீரர்கள் மற்றும் பொதுமக்கள் இருவர் இலேசான காயங்கள் அடைந்ததாகவும் சுட்டுக் கொல்லப்பட்ட தீவிரவாதி லக்சர்-இ-தொய்பா அமைப்பைச் சேர்ந்தவன் என்றும் காஷ்மீர் மாநில பொலிஸ் தலைவர் விஜயகுமார் தெரிவித்தார். (8-5)

# காஸாவிலிருந்து இஸ்ரேல் மீது ரொக்கெட்டுகள் வீசப்பட்டது போர்க்குற்றம்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம்

(ஜெனிவா)

**காஸாவில் பாலஸ்தீனியர்களால், மே மாதம் நடந்த மோதலின் போது இஸ்ரேல் மீது ரொக்கெட்டுகள் வீசப்பட்டது போர்க்குற்றம் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.**



தாக்குதல்கள், போர் சட்டங்களை அப்பட்டமாக மீறியது என்று பிரசாரக் குழு விசாரணையைத் தொடர்ந்து கூறியது.

நியூயோர்க்கை தளமாகக் கொண்ட உரிமைகள்குழு, இஸ்ரேலில் 12 பொது மக்களைக் கொன்ற ஹமாஸ் ரொக்கெட் தாக்குதல்களையும், காஸா பகுதிக்குள் ஏழு பாலஸ்தீனியர்களைக் கொன்ற தவறான ரொக்கெட் தாக்குதல்களையும் ஆய்வு செய்தது.

காஸாவிலிருந்து பாலஸ்தீனியர்களால் 4 ஆயிரத்து 360க்கும் மேற்பட்ட வழிகாட்டப்படாத ரொக்கெட்டுகள் மற்றும் மோட்டார் குண்டுகள் வீசப்பட்டன என இஸ்ரேல் கூறுகிறது. சண்டையின் போது காஸா பகுதியில ஆயிரம் இலக்குகளை தாக்கியதாக இஸ்ரேல் கூறியுள்ளது.

காஸாவில் சுமார் 67 குழந்தைகள் மற்றும் 39 பெண்கள் உட்பட 254 பேர் கொல்லப்பட்டனர் என்று காஸா சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலை தளத்திலிருந்து வெளியேறுமாறு எச்சரித்த காஸாவை ஆளும் தீவிரவாத இஸ்லாமியக் குழு, முதல் முதலாக இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியது. இதற்கு பதிலடி தாக்குதல்களை இஸ்ரேல் தொடுத்தது குறிப்பிடத்தக்கது.(8-5)

## ஆப்கானிஸ்தானுக்கு மூவாயிரம் துருப்புக்களை அனுப்ப அமெரிக்கா தீர்மானம்

(வோஷிங்டன்)

ஆப்கானிஸ்தான் தலைநகருக்கு மூவாயிரம் துருப்புக்களை அனுப்புவதற்கு அமெரிக்கா தீர்மானித்துள்ளது.

காபூலில் உள்ள அமெரிக்க தூதரக பணியாளர்கள் உள்ளிட்ட தரப்பினரை பாதுகாப்பாக வெளியேற்றுவதற்காக துருப்பினர்கள் அங்கு அனுப்பப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சின் பேச்சாளர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

அத்துடன் ஆப்கானிஸ்தானில் அமெரிக்க பிரஜைகளின் இருப்பை குறைத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் இராஜதந்திர அதிகாரிகள் உள்ளிட்ட தரப்பினரை வெளியேற்றுவதற்காக மூவாயிரம் துருப்பினர் அங்கு அனுப்பப்படவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆப்கானிஸ்தானுக்கு செல்லும் பாதுகாப்பு துருப்பினர் மீது தாக்குதல் நடத்தப்படுமாயின் அதற்கான பதில் வழங்கப்படும் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்க தூதரகம் உள்ளிட்ட இராஜதந்திர பாதுகாப்பு செயற்பாடுகளுக்காக 650 அமெரிக்க துருப்பினர் தற்போது ஆப்கானிஸ்தானில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (8-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுநீரக நோயாளிகளை அதிகம் பாதிக்கும் கொரோனா



(கொழும்பு)

**சிறுநீரக நோயாளிகளின் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி பெரும்பாலும் குறைவாகவே காணப்படும். எனவே கொரோனாவால் அவர்கள் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் என ஐ.டி. எச். மருத்துவமனை மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்தார்.**

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உள்ள சிறுநீரக நோயாளிகளின் உயிர் ஆபத்தில் இருப்பதாகவும் மருத்துவமனையின் மருத்துவர் தெரிவித்தார்.

மேலும் சிறுநீரக நோயாளிகளின் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி பெரும்பாலும் குறைவாகவே இருக்கும். இதனால் அவர்கள் பாதிக்கப்படுவதற்கான அதிக ஆபத்து உள்ளது என கூறப்படுகின்றது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் இதுவரை இறந்தவர்களில் பெரும்பாலானோர் சிறுநீரக நோயாளிகள் தான் என்றும் குறிப்பிட்டார்.

ஆகவே சிறுநீரக நோயாளிகள் கொவிட் தடுப்பூசிகளை போட்டுக்கொள்வதன் மூலம் மரணத்தை கட்டுப்படுத்தலாம் என்றும், அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென்றும் மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளார். (நி-5)

# தடுப்பூசி பெற்றவர்களின் நோய் எதிர்ப்பு திறன் ஆய்வு

## கலாநிதி சந்திம தெரிவிப்பு

(கொழும்பு)

கொரோனாவிற்கு எதிராக இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டவர்களின் நோய் எதிர்ப்பு திறன் குறித்து ஆராய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நோய் எதிர்ப்பு சக்தி காணப்படக் கூடிய கால எல்லை, அதன் தன்மை உள்ளிட்ட விடயங்கள் ஆய்வு செய்யப்படவுள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நிர்ப்பீடணம், உயிரணு தொடர்பான கற்கை நிறுவனத்தின் தலைவர் கலாநிதி சந்திம ஜீவந்தர குறிப்பிட்டார்.

அஸ்ட்ராஜெனேகா மற்றும் சினோபார்ம் தடுப்பூசிகளை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஆய்வுகளுக்கு தேவையான மாதிரிகள் பெறப்பட்டுள்ளதாகவும் கொரோனாவிற்கு எதிராக முதல் இரண்டு தடுப்பூசிகளும் ஏற்றப்பட்டதன் பின்னரே மூன்றாவது தடுப்பூசி குறித்து தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

முதல் இரண்டு தடுப்பூசிகளின் செயற்றிறனின் பெபேறுகளுக்கு அமையவே மூன்றாவது தடுப்பூசி குறித்து சிந்திக்க வேண்டும் எனவும் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்தார். (நி-5)

# பசில், ரணில், ரத்ன தேரர்; பாராளுமன்ற வருகை சட்டவிரோதம்

## சிரேஷ்ட வழக்கறிஞர் கொடித்துவக்கு

(கொழும்பு)

நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அத்துரலிய ரத்ன தேரர் ஆகியோரின் பாராளுமன்ற பிரதிநிதித்துவம் அரசியலமைப்புக்கு விரோதமானது என சிரேஷ்ட வழக்கறிஞரும் பொதுநல ஆர்வலருமான நாகானந்த கொடித்துவக்கு தெரிவித்தார்.

இவர்களை பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்க உத்தரவிடக் கோரி நீதிமன்றத்தை நாடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும்போது கோட்டாபய ராஜபக்ஷ அமெரிக்க பிரஜையாக இருந்தார்.

அவர் தேர்தலில் போட்டியிட்டதும் அரசியலமைப்புக்கு விரோதமானது எனவும் நாகானந்த கொடித்துவக்கு மேலும் தெரிவித்தார். (நி-5)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2381

### துர்க்கா

எனக்கு ஒரு டவுட்டு வருமானத்திற்கு அதிகமாக சொத்து இருந்தா வழக்கு போடுவாங்களாம்...



அப்போ வருமானத்துக்கு அதிகமாக கடன் இருந்தால் அடைச்சுடுவாங்களா.?!?!

### சக்திவேல்

நிஜமா தான் சொல்றீங்களா.... டாக்டர்? என் மனைவியைக் காப்பாத்த வழியே இல்லையா...!



யோவ், உனக்கு இதைக் கேக்க கேக்க சந்தோஷமா இருக்கலாம்... அதற்காக நான் எத்தனை தடவை திரும்ப திரும்ப சொல்லிக்கிட்டு இருக்கிறது...? .

### கோகிலா

ME: அம்மா கொஞ்சம் வெண்டைகாய், கீரை எல்லாம் சமைத்து வைமா ஞாபக சக்தி வரும்

MOM: ஏன் டா படிச்சது எல்லாம் மறந்து போகுதா



ME: இல்லமா சார்ஜ் சுவிட்ச் போட மறந்து போகுது

MOM: திருத்த மாட்டியா டா நீ

### டருணிகா

கணவன்: என்னடி இது பெட்ஷீட் கனத்துல புடவை எடுத்து இருக்கிறாய்??

மனைவி: கட்டிக்க போரது நான் தானே!!!

கணவன்: துவைக்கிறவனுக்கு தானே கஷ்டம் தெரியும்!!!

மனைவி: ????

### பவதாரணன்

மனைவி- கணவனுக்கு சர்ப்ரைஸ் கொடுக்க நினைத்து கிச்சனுக்கு போய் புது நம்பரில் இருந்து போன் செய்தாள்!

மனைவி- ஹலோ டார்லிங்..

கணவன்- அப்புறம் ஹோல் பண்ணு செல்லம், இப்போ அந்த பிசாசு கிச்சன்ல தான் இருக்கு...



### கவிநயா



உன் ஃபிரண்ட்ஸ் லாம் ஜாலியா ஜுஸ் ஐஸ் கிரீம் லாம் சாப்பிட்டு இருக்காங்க நீ ஏன் பா இங்க சோகமா இருக்க



காசு என்னை குடுக்க சொல்றாங்க சார்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணங்களுக்கு இடையிலான குறுக்கு வீதிகளும் முடக்கம்

## மீறினால் தண்டனை என்கிறார் அஜித் ரோஹண

(கொழும்பு)

**மாகாணங்களுக்கிடையிலான அனைத்து பிரதான மற்றும் குறுக்கு பாதைகளும் முடக்கப்பட்டு போக்குவரத்துகள் கடுமையாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் மாகாணங்களுக்கிடையில் பொது மக்கள் அத்தியாவசியமற்ற பயணங்களை மேற்கொள்ள வேண்டாமென பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.**



பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொவிட்-19 தொற்றுப் பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் மீண்டும் கடுமையாக அமுல்படுத்தப்பட்டுள்ளன.

பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து இந்நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட்டுள்ளதால் பொது மக்கள் அத்தியாவசியமற்ற எந்தவொரு பயணத்தையும் மாகாணங்களுக்கிடையில் மேற்கொள்ள வேண்டாம்.

மாகாணங்களுக்குள் உட்புகும் பிரதான மற்றும் குறுக்கு வழிகள் அனைத்தும் முடக்கப்பட்டு அத்தியாவசிய தேவைகளுக்காக மாத்திரமே போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படும்.

தனிமைப்படுத்தல் சட்டத்தைமீறி எவரும் மாகாணங்களுக்கிடையிலான பயணத்தை மேற்கொண்டால் அவர்கள் கைதுசெய்யப்படுவர்.

அத்துடன் அவர்கள் பயணிக்கும் வாகனங்களும் பொலிஸாரின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்படும் என அவர் தெரிவித்தார். (நி-5)

# இலங்கை உட்பட 10 நாடுகளுக்கான தடையை நீடித்தது பிலிப்பைன்ஸ்

(கொழும்பு)

டெல்டா வைரஸ் அதிகம் பரவுவதன் காரணமாக இலங்கை உட்பட பத்து நாடுகளைச்சேர்ந்த பயணிகளுக்கான பயணத் தடையினை ஒகஸ்ட் இறுதி வரை பிலிப்பைன்ஸ் நீட்டித்துள்ளது.

இந்த தகவலை பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி செய்தித் தொடர்பாளர் நேற்று வெள்ளிக்கிழமை உறுதிப்படுத்தினார்.

ஒகஸ்ட் 16 முதல் ஒகஸ்ட் 31 வரை பயணக் கட்டுப்பாடுகளை நீடிக்க கொரோனா வைரஸ் பணிக்குழுவின் பரிந்துரையை ஜனாதிபதி ரோட்ரிகோ டுடெர்டே அங்கீகரித்தார் என்று அவர் அறிக்கையில் தெரிவித்தார். (நி-5)

# ஹற்றனில் மண்சரிவு 2 கடைகள் முற்றாக சேதம்

(ஹற்றன்)

நுவரெலியா- ஹற்றன் பகுதியில் ஏற்பட்ட மண்சரிவில் 2 கடைகள் முற்றாக சேதமடைந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை குறித்த சம்பவம் இடம்பெற்ற வேளையில், கடையில் இருந்தவர் வெளியில் சென்றிருந்தமையினால் அவர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார்.



மேலும் மண்சரிவு காரணமாக கடையில் இருந்து தளபாடங்கள் மற்றும் குளிர்சாதன பெட்டி உட்பட அனைத்து பொருட்களும் சேதமடைந்துள்ளன.

இதேவேளை ஹற்றன் பிரதான வீதியிலுள்ள பல இடங்களில் மண்சரிவு அபாயம் நிலவி வருகின்றமையினால், குறித்த வீதியினை பயன்படுத்தும் வாகன சாரதிகள் மிகவும் அவதானமாக வாகனங்களை செலுத்துமாறு பொலிஸார் அறிவித்துள்ளனர். (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## குழந்தையின் குருதிக் கொடை!

ஒரு பெண் குழந்தை. எமிலி ஹாக்ஸ் என்று பெயர். இந்த உலகத்திலேயே மிகக் குறைந்த வயதிலே இரத்ததானம் செய்த குழந்தை அதுதானாம். அப்படி என்றால் அந்தக் குழந்தை இரத்த தானம் செய்த போது வயது என்னவென்று நினைக்கிறீர்கள்? ஒரு நாள் கூட ஆகவில்லை! பிறந்து சில நிமிடங்களிலேயே இரத்ததானம் செய்து விட்டதாம். அந்த இரத்தம் இன்னொரு குழந்தையைக் காப்பாற்றியிருக்கு.

இந்த உலகத்துக்கு வந்ததும் அது செய்திருக்கின்ற முதல் காரியம் இரத்ததானம். பிரிட்டனிலே உள்ள பிரிஸ்டல் நகர். அங்கே இருக்கிறது சவுத்மீட் மருத்துவமனை.

அந்த மருத்துவமனையிலே மாண்டி என்கிற இருபத்தேழு வயது பெண்ணுக்கு ஒரு குழந்தை பிறந்தது (1995 இல்) அது தான் இந்த எமிலி. குழந்தை பிறந்ததும் அதை தாயிடமிருந்து பிரிக்கின்றதற்கு தொப்புள் கொடியை அறுப்பார்கள் இல்லையா? அதிலே இருக்கின்ற இரத்தத்தைத் தான் எடுத்து சேகரிக்கிறார்கள்.

இது வலியில்லாத ரொம்ப சுலபமான குருதி சேகரிப்பு. அந்தத் தொப்புள் கொடி கொஞ்ச நாளிலே தனியாகி வீணாப் போய்விடக் கூடிய ஒன்று தான் என்பதினாலே அதிலே உள்ள இரத்தம் சம்பந்தமான நோய்களை எதிர்த்துப் போராடக்கூடிய வலிமை அதற்கு உண்டு. இரத்தப் புற்றுநோய் – இரத்தம் தொடர்பான மற்ற நோய்கள் இவைகளிலே அவதிப்படுகின்ற குழந்தைகளுக்கு இதுமாதிரி பச்சிளம் குழந்தைகளின் இரத்தத்தை செலுத்தினால் ரொம்ப சீக்கிரத்தில் குணமாகியிடுதாம்.

இன்றைக்கு உலகத்திலே ஒரு சில மருத்துவமனைகளில் இது மாதிரியான பரிசோதனைகள் நடந்துகொண்டிருக்கிறது. "தொப்புள் கொடி இரத்த மாற்று சிகிச்சை" என்று இதற்குப் பெயர் வைத்திருக்கிறார்கள். இந்தப் புரட்சிகரமான மருத்துவ சிகிச்சை மூலமாக நிறைய குழந்தைகள் காப்பாற்றப்படுகிறன.

இரத்தப் புற்றுநோய் கண்ட பெரியவர்களையும்கூட இந்த இரத்தம் காப்பாற்றுகிறது என்று இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள். தொப்புள் கொடியிலிருந்து எடுக்கப்பட்ட இரத்தத்தை ஒரு போத்தலில் செலுத்தி... நோய் வாய்ப்பட்ட குழந்தைக்கு ஏற்றுவது தான் இப்போதைய சிகிச்சை முறை.

இந்த தொப்புள் கொடி இரத்தம் எட்டு வயதிற்கும் குறைவாக உள்ள குழந்தைகள் உடம்பிலே செலுத்தப்படும் போது அது நோர்மலான இரத்தமாக மாறிவிடுகிறது என்கிறார் அந்த மருத்துவமனையில் உள்ள டாக்டர். பச்சிளம் குழந்தையின் இரத்திலே உள்ள ஸ்டெம் செல்கள் சுத்தமானவை. கருப்பையிலே எந்த நோய்த் தாக்குதலுமின்றி பாதுகாப்பாக அது இருந்து வந்திருக்கிறது.

அதனாலே அது நோயாளிகளின் உடம்பிலே இருக்கிற நல்ல செல்களையோ எலும்பு மஜ்ஜையையோ தாக்காது. அவைகளோடு பொருந்திவிடும். எல்லாவற்றையும் விட முக்கியமான செய்தி... நம்பிக்கையில்லாத பல்வேறு சிகிச்சை முறைகளுக்குப் பதிலாக முதல் முறையாக இரத்தப்புற்றுநோய்க்கு சாத்தியமான ஒரு நல்ல சிகிச்சை முறை கிடைத்திருக்கிறது தான்!

எமிலிங்கற அந்தக் குழந்தை பிறந்த உடனேயே அந்தக் குழந்தையினுடைய தாயிடம் (மாண்டி) இது மாதிரி ஒரு யோசனையை டாக்டர்கள் சொன்னார்கள். உடனே அந்த அம்மா சம்மதம் கொடுத்தார்கள்.

"என் குழந்தை தானம் செய்கிற இரத்தத்தால் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிற இன்னொரு குழந்தை காப்பாற்றப்படும் என்கிற நினைப்பே எனக்குப் பரவசம் தந்தது!" என்கிறார் அந்த அம்மா! அதுவும் தொப்புள் கொடியிலே இரத்தம் சேகரிக்கிறது ரொம்ப எளிய முறை.நம்ம உடம்பிலே எடுக்கிறது மாதிரி... இரத்தக் குழாயைத் தேடிப்பிடித்து ஊசியாலே குத்தி நம்மளை பயமுறுத்தி போத்தலில் சேகரிக்கிறது மாதிரியெல்லாம் இல்லை! இது பரவசமூட்டக்கூடிய ஒரு இரத்ததானம். இந்த காலத்திலே இரத்தத்தானம் செய்கிறதிற்கு எவ்வளவு பிரசாரம் செய்ய வேண்டியிருக்கிறது! சிபாரிசு செய்ய வேண்டியிருக்கிறது.

நம்ம ஆளு ஒருத்தன் இரத் தானம் செய்வதற்கு ரொம்பப் பயந்துக் கொண்டிருந்தான். ஒருநாள் துணிந்து போனான். டாக்டர் ரூமுக்குள்ளே நுழைந்தான் சிறிது நேரம் ஆனது. வேகமாக வெளியே வந்தான்.

"ஏம்பா வந்திட்ட... இரத்ததானம் செய்யவில்லையா?" என்று கேட்டார்கள் "இல்லை... செய்யவில்லை" என்றான்.

"ஏன்" என்றார்கள் இரத்தத்தை கண்டால் மயக்கம் வந்திடும்! என்றான் பயந்துகொண்டே! . "பிறகு ஏன் இவ்வளவு தூரம் வந்தீர்கள்!" என்றார்கள். "ஐயோ அது எனக்கு இல்லை... இரத்தத்தைக் கண்டால் டாக்டரு க்கு மயக்கம் வந்திடுமாம்! அது தான் வெளியே வந்திட் டேன்" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைத் தேர்தல்கள்

**08**

**கலாநிதி க.தவலிங்கம்,**
**ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்**



சரியாகவும், முழுமையாகவும், தீர்மானதுமான கருத்துக்களை வெளிப்படுத்தாமல் சிலவற்றை வெளிப்படுத்தவும், சிலவற்றை நகர்த்துவதும், சிலவற்றை சொல்லாமல் விழுங்கி விடுவதுமான சில போக்குகளை இதுவரை கடைப்பிடிக்க வேண்டிய இக்கட்டான நிலைமையில் இருந்தேன். காரணம் கனிவதற்கு முன் அடித்தால் வெம்பிவிடும். வெம்பிவிடாமல் கனியை ஒழுங்காகப்பறித்தெடுக்க வேண்டிய கடமையை மேற்கொள்ள விரும்பினேன். அந்தக் காலம் வரைக்கும் என்னென்ன வேலையைச் செய்து முடிக்க வேண்டுமோ அதனைச் செய்து முடிக்க வேண்டிய கடமையும் எனக்கு இருந்ததால், சில விடயங்களை மறைத்தும் விழுங்கியும் கூறினேன்.

இதன்விளைவாக ஜனாதிபதி அதிகாரப் பரவலாக்கலைச் செய்ய விரும்பினாலும் சில அதிகாரிகள் தடைக்கற்களாக நிற்கின்றார்கள் என்றும், சில அமைச்சர்கள் நல்லவர்கள், சில அமைச்சர்கள் பிரச்சனைக்குரியவர்கள் என்றும், ஆங்காங்கே மழுப்பி சில விடயங்கள் நடப்பதுபோலவும், இடைநடுவில் நின்று கருத்துக்களைக் கூற வேண்டியவனாக இருந்தேன். ஆனால் இன்று அவ்வாறின்றி யதார்த்தபூர்வமான நிலைமைகளை தெளிவுபடுத்த விரும்புகின்றேன். அரசாங்கம் என்பது ஜனாதிபதி, மந்திரிசபை, அதிகாரிகள் அத்தனை பேரையும் சேர்ந்த அமைப்புத்தான். ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாது. எனவே அதிகாரப் பரவலாக்கல் நடந்தாலும் சரி, நடக்காவிட்டாலும் சரி கொடுத்த வாக்குறுதிகள் ஒழுங்காக நிறை வேற்றப்படா விட்டால் அவர்கள் அனைவருமே பொறுப்பேற்க வேண்டும்.

> **"இந்த மாகாண அரசுப் பேரவை உறுப்பினர்கள் மட்டுமல்ல, இந்த நாட்டு மக்களும், சர்வதேச சக்திகளும் அதிகாரப் பரவலாக்கல் உண்மையாக நடைபெறுகின்றதா? என்பதை அக்கறையோடு கவனித்துவருகின்றார்கள். சரியாகவும், முழுமையாகவும், தீர்மானதுமான கருத்துக்களை வெளிப்படுத்தாமல் சிலவற்றை வெளிப்படுத்தவும், சிலவற்றை நகர்த்துவதும், சிலவற்றை சொல்லாமல் விழுங்கிவிடுவதுமான சில போக்குகளை இதுவரை கடைப்பிடிக்க வேண்டிய இக் கட்டான நிலைமையில் இருந்தேன். காரணம் கனிவதற்கு முன் அடித்தால் வெம்பிவிடும். வெம்பி விடாமல் கனியை ஒழுங்காகப்பறித்தெடுக்க வேண்டிய கடமையை மேற் கொள்ள விரும்பினேன்."**

> **"ஜனாதிபதி அதிகாரப் பரவலாக்கலைச் செய்ய விரும்பினாலும் சிலஅதிகாரிகள் தடைக்கற்களாக நிற்கின்றார்கள் என்றும், சில அமைச்சர்கள் நல்லவர்கள், சில அமைச்சர்கள் பிரச்சனைக்கு உரியவர்கள் என்றும், ஆங்காங்கே மழுப்பி சில விடயங்கள் நடப்பதுபோலவும், இடைநடுவில் நின்று கருத்துக்களைக் கூறவேண்டியவனாக இருந்தேன். ஆனால் இன்று அவ்வாறின்றி யதார்த்த பூர்வமான நிலைமைகளை தெளிவுபடுத்த விரும்புகின்றேன்."**

இந்த நாட்டில் குறிப்பாக வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிலவி வந்த அராஜக ஆயுதங்களின் ஆட்சி இன்று குறைக்கப்பட்டிருக்கிறது. இதை முடிவிற்கு கொண்டுவர வேண்டும். இதற்காக நாம் அனைவரும் உழைக்க வேண்டும். அராஜக ஆயுதங்களின் ஆட்சி மறைந்து சட்டத்தின் ஆட்சி உருவாக்கப்படல் வேண்டும். யாராவது பாதிக்கப்பட்டால் அவர்கள் சட்டபூர்வமாக குரல் எழுப்பவும், பாதுகாத்துக் கொள்ளக் கூடியதுமான நிலைமைகள் உருவாக்கப்பட வேண்டும். சட்டத்தின் ஆட்சி நிலவும் சமுதாய அமைப்பை உண்மையான சமாதானத்தினாலும் ஜனநாயகத்தினாலுமே உருவாக்கமுடியும். எனவே ஜனநாயகம், சமாதானம் என்ற ஒப்பாரி வைப்பதை விடுத்து கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளின் அடிப்படையில் அதிகாரப் பரவலாக்கலைச் செய்ய வேண்டும். அதற்குரிய ஒரு நிலைமையை இந்த மாகாண அரசுப்பேரவை உருவாக்க வேண்டும். அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான முப்பது பிரேரணைகளை இச் சபை முன் சமர்ப்பிக்க வேண்டிய கட்டாயச் சூழ்நிலையில் இருக்கின்றேன்.

அவ்வாறு கூறிய அவர் ஒவ்வொன்றாக பிரேரணைகளை குறிப்பிட்டார். அவரது முதலாவது பிரேரணை மாகாண சபையின் பெயர் சம்பந்தமானது.

### மாகாண சபையா? மாகாண அரசாங்கமா?

உருவாக்கப்பட்ட மாகாண சபையை, மாகாண சபை என்பதா? மாகாண அரசு என்பதா ? என்பது தொடர்பாக மத்திய அரசாங்கத்திற்கு நெருக்கடி ஏற்பட்டு இருக்கின்றது. ஒவ்வொரு மாகாண அமைப்புக்களும் தங்களை ஒவ்வொரு விதமாக அழைப்பதால் குழப்பங்களும், சிக்கல்களும் ஏற்படுகின்றன. எனவே நீங்கள் மாகாணசபை என்றே அழைத்துக் கொள்ளுங்கள் என்று நாசூக்காக மத்திய அரசு சமாளிக்க முயல்கின்றது. மாகாண அரசாங்கம் என்று குறிப்பிடக்கூடாது என பல நெருக்கடிகளைக் கொடுத்து வருகின்றார்கள். அதற்கு விளக்கமாக ஒரு நாட்டில் ஒரு அரசாங்கத்தான் இருக்கவேண்டும் என்கிறார்கள். ஆட்சியில் இருப்பவர்களுக்கு எங்கே குழப்பம் வருகிறது என்றால் என்னைப் பொறுத்தளவில் அவர்கள் சபையையும் பாராளுமன்றத்தையும் போட்டுக் குழப்பி பாராளுமன்றம் என்று சொல்வது தான் அரசாங்கம் ஆகையால் எப்படி இந்தச் சபையை பாராளுமன்றமென்று சொல்லலாம் என்று வினவுகின்றார்கள்.

> **"உருவாக்கப்பட்ட மாகாண சபையை, மாகாண சபை என்பதா? மாகாண அரசு என்பதா? என்பது தொடர்பாக மத்திய அரசாங்கத்திற்கு நெருக்கடி ஏற்பட்டு இருக்கின்றது. ஒவ்வொரு மாகாண அமைப்புக்களும் தங்களை ஒவ்வொரு விதமாக அழைப்பதால் குழப்பங்களும், சிக்கல்களும் ஏற்படுகின்றன. எனவே நீங்கள் மாகாணசபை என்றே அழைத்துக் கொள்ளுங்கள் என்று நாசூக்காக மத்திய அரசு சமாளிக்கமுயல்கின்றது. ஒரு அரசாங்கத்திற்கு இருக்க வேண்டியதான அலகு, கூறுகள் அத்தனையையும் கொண்டிருக்கக் கூடியதான இந்த அமைப்பினை அரசாங்கம் என்று கூறக்கூடாது என்று சொல்வது தவறு என்பது எனது கருத்து. "வடக்கு-கிழக்கு இணைந்த மாகாண சபையின் முன்னாள் முதல் அமைச்சர் அ.வரதராஜபெருமாள்.**

நாங்கள் எந்த கட்டத்திலும் இந்தச் சபையை பாராளுமன்றம் என்று கூறவில்லை. இது மாகாண சபை என்பதில் மிகவும் தெளிவாக இருக்கிறோம். இது மத்தியிலே எவ்வாறு பாராளுமன்றம் இருக்கின்றதோ அதேவகையில் பாராளுமன்றத்தின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட வகையில் மாகாண மட்டத்தில் இருக்கக் கூடியதான ஒரு சபையாகும். இதற்கு சட்டங்களை ஆக்கும் அதிகாரங்கள் இருக்கின்றன. அத்தோடு இந்த மாகாண அமைப்புக்கு இந்தச் சபையைவிட ஒரு ஆளுநர் இருக்கின்றார். அமைச்சரவை ஒன்று இருக்கின்றது. அமைச்சர்களுக்கும் அதிகாரிகளுக்கும் நிறைவேற்று அதிகாரம் இருக்கிறது. இவ்வளவையும் கொண்டது தான் அரசாங்கம். அது மட்டுமல்ல ஒரு அரசினுடைய அமைப்பில் சட்டவாக்கம், நிறைவேற்று அதிகாரம் இவற்றோடு அதற்குப் படைகள் இருக்கும். நாட்டினுடைய தேசியப் பாதுகாப்புக்காக மத்திய அரசாங்கமானது இராணுவம், கடற்படை, விமானப்படை என்பவற்றைக் கொண்டிருப்பது போல மாகாண அரசாங்கத்திற்கு மாகாணத்தினுடைய பாதுகாப்பு தொடர்பாக மாகாணபொலிஸ் படையை வைத்துக் கொள்ளக் கூடிய அதிகாரம் 13 ஆவது அரசியல் அமைப்புதிருத்தச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டிருக்கின்றது. எனவே ஒரு அரசாங்கத்திற்கு இருக்க வேண்டியதான அலகு, கூறுகள் அத்தனையையும் கொண்டிருக்கக் கூடியதான இந்த அமைப்பினை அரசாங்கம் என்று கூறக்கூடாது என்று சொல்வது தவறு என்பது எனது கருத்து. இது தொடர்பாக சபை தீர்க்கமான ஒரு முடிவினை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். அவரது இரண்டாவது பிரேரணை மாகாண அமைச்சரவையின் உறுப்பினர்கள் எண்ணிக்கை சம்பந்தமானது.

### மாகாண அமைச்சரவையின் உறுப்பினர்கள் எண்ணிக்கை

மாகாண அமைச்சரவையில் ஐந்து உறுப்பினர்கள் தான் இருக்க வேண்டுமென்ற கட்டுப்பாடு இருந்து வருகிறது. ஆனால் மத்திய அரசாங்கத்தில் அவ்வாறு ஒரு கட்டுப்பாடு இல்லை. இப்போது (1989) 72 பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களாக இருக்கின்றார்கள். அதாவது 22 அமைச்சர்களும், (அமைச்சரவை அந்தஸ்துள்ள) 50 இராஜாங்க அமைச்சர்களும் இருக்கிறார்கள்.

மாகாண அரசிற்கு நிதி சம்பந்தமான பல அமுலாக்கங்களைச் செய்ய வேண்டி இருப்பதால் ஆகக் குறைந்தது ஐவரை அமைச்சரவை உறுப்பினர்களாக வைத்துக்கொள்ளலாம் என்ற சட்டத்திருத்தம் செய்யப்பட வேண்டுமென்றும் உறுப்பினர்களின் விகிதாசாரத்திற்கேற்ப அமைச்சர்களுடைய எண்ணிக்கையை மாற்றிக் கொள்வதற்கு மாகாண அரசாங்கத்தில் சட்ட பூர்வமான அதிகாரம் வழங்கப்பட வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை இந்தச் சபைகோர வேண்டுமென்றும் நான் முன்மொழிகின்றேன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொவிட் தொற்றால் அச்சமடைந்து தப்பியோடியவர் பரிதாபமாக மரணம்

(கொழும்பு)

அநுராதபுரம், மெத்சிறி செவன கொவிட் தீவிர சிகிச்சைப் பிரிவில் குழப்பத்தை ஏற்படுத்தி, அங்கிருந்து தப்பிச் சென்ற நபர் ஒருவர் நேற்று முன்தினம் அதிகாலை உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கொழும்பில் உள்ள நிதி நிறுவனம் ஒன்றில் பணியாற்றிய அநுராதபுரம், ஜயசிரிபுர பிரதேசத்தை சேர்ந்த் 39 வயதுடைய திருமணமான நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கொவிட் தொற்றியமையினால் வீட்டில் சுய தனிமைப் படுத்தப்பட்டு சிகிச்சை பெற்ற இளைஞன் மெதசிறி கொவிட் சிகிச்சை நிலையத்தின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் அதிகாலை அவர் தனக்கு பொருத்தப்பட்டிருந்த ஒட்சிசன் இயந்திரத்தை அகற்றிவிட்டு அருகில் இருந்த நோயாளிகள் மீது நீர் ஊற்றி குழப்பம் ஏற்படுத்தியுள்ளார். அத்துடன் தீவிர சிகிச்சைப் பிரிவின் ஜன்னல் கண்ணாடிகளை உடைத்து அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

தப்பி சென்றவர் மயங்கிய நிலையில் கிடந்துள்ளார். அவரை உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்க ஊழியர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். எனினும் அவர் உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலை தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த நபர் அருகில் உள்ள நோயாளிகள் ஆபத்தான நிலையில் இருப்பதனை பார்த்து மன ரீதியாக பாதிக்கப்பட்டமையினால் இவ்வாறு செயற்பட்டிருக்கலாம் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (நி-5)

# சீரற்ற காலநிலையால் மலையகத்தில் நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் திறப்பு

(மஸ்கெலியா)

மத்திய மலை நாட்டில் தொடர்ச்சியாக கடும் மழை பெய்து வருவதன் காரணமாக நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் உயர்வடைந்துள்ளது. இதனால் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இதன்படி மஸ்கெலியா-மவுஸாகலை நீர்த்தேக்கத்தின் மூன்று வான்கதவுகளும் கெனியோன் நீர்த்தேக்கத்தில் இரண்டு வான் கதவுகளும் நேற்று முன்தினம் வியாழக்கிழமை திறக்கப்பட்டன.

எனவே நீர்த்தேக்கத்திற்குக் கீழ் தாழ்நிலப்பகுதியில் வாழும் மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



## விரதங்கள்

## தீர்க்க சுமங்கலி வரம் அருளும் வரலட்சுமி நோன்பு



### விரதத்தின் மகிமை

பத்ரச்ரவஸ் என்ற மன்னன், மகா விஷ்ணுவின் சிறந்த பக்தனாக திகழ்ந்தான். அவனது மனைவி சுரசந்திரிகா. இந்த தம்பதிகளின் மகள் சியாமபாலா. இவளை சக்கரவர்த்தியான மாலாதரன் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தனர்.

காலம் கடந்தது. ஒரு சமயம் மகாலட்சுமி தாயார், வயதான சுமங்கலியின் வேடம் தரித்து, சுரசந்திரிகாவின் அரண்மனைக்கு வந்தார். சுரசந்திரிகாவிடம் வரலட்சுமி விரதத்தை விரிவாக கூறி, அதை கடைப்பிடிக்கும் படி கூறினார். மகளை பிரிந்த ஏக்கத்தில் இருந்த சுரசந்திரிகா, லட்சுமி தேவியை யாரோ என்று கருதி விரட்டி விட்டாள்.

அப்படி விரட்டப்பட்ட லட்சுமி தேவியை, அரசியின் மகள் சியாமபாலா சமாதானப்படுத்தி, அவரிடம் இருந்து வரலட்சுமி விரத முறைகளை விரிவாக கேட்டு உபதேசம் பெற்றாள். பக்தியுடன் விரதத்தை கடைப்பிடித்தாள். விரத மகிமையில் அவள் செல்வச் சிறப்பை அடைந்தாள்.

ஆனால் லட்சுமி தேவியை அவமானப்படுத்திய அவளது பெற்றோர், வறுமையில் வாடத் தொடங்கினர். விபரம் அறிந்த சியாமபாலா ஒரு குடம் நிறைய தங்கத்தை பெற்றோருக்கு அனுப்பி வைத்தாள். ஆனால் அவர்கள் செய்த தீவினையால் அது கரியாகி விட்டது.

இதையடுத்து சியாமபாலா, தன் தாயான சுரசந்திரிகாவிடம் வரலட்சுமி விரதத்தைப்பற்றி சொல்லி பூஜை செய்யும் படி கூறினாள். அவளும் மகள் சொன்னபடி வரலட்சுமி விரதத்தை கடைப்பிடித்து பூஜை செய்தாள். அதன் பிறகு இழந்த செல்வங்கள் மீண்டும் கிடைத்தது.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## சுகாதார விதி மீறல் மேலும் 64 பேர் கைது

(கொழும்பு)

நேற்று முன்தினம் தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய 64 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனைப் பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதற்கமைய, தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் 54 ஆயிரத்து 100 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.(நி-5)

## கஞ்சா போதைப்பொருளுடன் பிரித்தானிய பிரஜை கைது

(கொழும்பு)

நேற்று முன்தினம் ஹிக்கடுவ பிரதேசத்தில் ஒரு கிலோகிராம் கஞ்சா போதைப்பொருளுடன் பிரித்தானிய பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹிக்கடுவ பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய, 43 வயதான குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் காலி மேலதிக நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். (நி-5)

## மேல் மாகாணத்திற்குள் பிரவேசிக்க முயன்ற 364 பேர் திருப்பியனுப்பி வைப்பு

(கொழும்பு)

மேல் மாகாணத்திற்குள் உட்பிரவேசிக்க மற்றும் மேல் மாகாணத்திலிருந்து வெளியேற முயன்ற 364 பேர், நேற்று முன்தினம் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் பயணக் கட்டுப்பாட்டை மீறிய 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை நீதிமன்றத்தி முன்னிலைப் படுத்துவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (நி-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 120 | 140 | 140 |
| உருளைக்கிழங்கு | 130 | 160 | 160 | 160 |
| பச்சைமிளகாய் | 180 | 180 | 200 | 200 |
| தக்காளி | 120 | 120 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 | 40 |
| கோவா | 160 | 160 | 180 | 200 |
| கரட் | 140 | 160 | 180 | 200 |
| பூசணி | 100 | 90 | 90 | 120 |
| புடோல் | 100 | 70 | 70 | 120 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 150 | 160 | 200 | 200 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 100 | 120 |
| பாகற்காய் | 250 | 280 | 250 | 250 |
| வெண்டிக்காய் | 50 | 70 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 140 | 160 | 150 | 160 |
| பயற்றங்காய் | 140 | 160 | 80 | 1220 |
| லீக்ஸ் | 200 | 230 | 240 | 260 |
| பீற்றூட் | 100 | 100 | 90 | 100 |
| கறிமிளகாய் | 250 | 180 | 220 | 260 |
| முருங்கைக்காய் | 180 | 250 | 200 | 200 |
| போஞ்சி | 200 | 300 | -- | 360 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | -- | 120 |
| கீரை - 1 பிடி | 40 | 50 | 50 | 50 |
| தேசிக்காய் | 60 | 100 | 120 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 70 | 60 | 40-70 |
| இராசவள்ளி | -- | -- | -- | 400 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 180 | 320 |
| முள்ளங்கி | 80 | 80 | 80 | 160 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 60 | 20 | 30 |
| சரப்பலா | 50 | 50 | 40 | 60 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## உண்மையான பக்தன்

அதற்கு அவன், "எனக்குக் கடவுளை நினைக்கவே நேரமில்லை. அவசரமாக சிலருக்கு உதவி செய்ய வேண்டியிருக்கிறது. நான் போகிறேன்" என்று பதில் கூறிவிட்டு ஏழைகளுக்கு உதவிட அவன் விரைந்தான்.

தேவதைகள் கடவுளிடம் திரும்பி வந்து நடந்ததை அப்படியே விவரித்தன.

எல்லாவற்றையும் கேட்ட கடவுள் மௌனம் சாதித்தார்.

"தேவனே... உண்மையான பக்தன் யார் என்று கண்டுபிடித்து விட்டீர்களா?" என்று கேட்டன. "கண்டு பிடித்து விட்டேன்!" என்றார் கடவுள்.

"யார் பிரபு? தினமும் மூன்று வேளை கோவிலுக்கு வருபவர் தானே?" என்று கேட்டன தேவதைகள்.


கடவுள் புன்னகைத்தபடியே, "இல்லை... இல்லை... கடைசியாக என்னை நினைக்கக்கூட நேரமில்லாது ஏழைகளுக்கு சேவை செய்ய ஓடினானே... உண்மையில் அவன் தான் எனது உண்மைப் பக்தன்," என்றார்.

உண்மை புரிந்தது தேவதைகளுக்கு.

(முற்றும்)



# மகாபாரதம்




இதிகாச புராணங்களில் உள்ள தரும சாத்திரங்கள் அனைத்தும் உம் உள்ளத்தில் நிலைப் பெற்றுள்ளன. இவ்வலகில் தோன்றும் சந்தேகம் அனைத்தையும் உம்மால் தான் போக்க முடியும்.

மனித குல மாணிக்கமே தருமரின் மனதில் உதித்த சோகத்தையும், சந்தேகத்தையும் விலக்க வேண்டும்"

கண்ணனின் உரையைக் கேட்ட பீஷ்மர் கை கூப்பித் தொழுதார். மெல்லத்தலையை உயர்த்திச் சொன்னார்.

"உலக உயிர்களின் பிறப்புக்கும், இறப்புக்கும் காரணமான நாயகரே உம்மை நான் சரணடைந்தேன்.

உமது அருளால் உமது விசுவரூபத்தை நான் காணும் பேறு பெற்றேன். உமது திருமுடி ஆகாயத்தை அளாவியிருக்கிறது. உமது திருப்பாதங்கள் பூமியில் தங்கியிருக்கின்றன. திக்குகள் உமது கைகளாக விளங்குகின்றன. சூரியன் உமது கண் ஆவான்.

காயாம்பூ மேனி உடையவரே மின்னல் போல் ஒளி வீசும் உமது மேனியைக் கண்டு வியப்படைகிறேன். தாமரைக் கண்ணனே பக்தியுடன் உம்மைச் சரண் அடைந்த எனக்கு நற்கதியை அருள வேண்டும்" எனத் துதி செய்தார்.

கண்ணபிரான், "எம்மிடத்தில் உமக்கு மேலான பக்தி இருப்பதால் எனது விசுவரூபத்தைக் காட்டினேன். இன்று முதல் மேலும் 30 நாட்கள் நீங்கள் உயிருடன் இருக்கப் போகிறீர்கள். இந்த முப்பது நாட்களும் நூறு நாட்களுக்கு நிகரானவை.

சூரியன் வடக்கு நோக்கிச் செல்லும் (உத்தராயணம்) காலத்தை எதிர்பார்க்கும் உம் மைத் தேவர்கள் எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். உமக்கு உயர்ந்த கதி கிடைக்கும். நீர் அழிவற்ற உலகத்தை அடையப் போகிறீர்.

பீஷ்மரே.. நீர் மேலுலகம் சென்றதும் இந்த உலகத்தில் உள்ள ஞானங்கள் எல்லாம் குறைந்து போகும். அதனால் யாவரும் தருமத்தை அறிந்துகொள்ள உம்மைச் சூழ்ந்து இருக்கின்றனர்.

தருமரின் சோகம் போக அவர் சந்தேகம் அகல சகல ஞானத்தையும் அவருக்கு உபதேசம் செய்வீராக.. தருமர் உம்மிடம் பெறும் ஞானச்செல்வத்தை உலகுக்கு வாரி வழங்குவார்" என்று கூறினார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

*எல்லாச் செல்வமும் இறைவனுடையதே. அதை வைத்திருப்போர் அதன் காவலரேயன்றி அதன் உரிமையாளர் அல்லர். – ஸ்ரீ அரவிந்தர்*

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## நல்லூரில் பொலிஸாரின் செயல் எந்தவகையில் நியாயமாகும்!

நல்லூர்க் கந்தனின் கொடியேற்றத் திருவிழாவை தெரு வீதியில் நின்று தரிசிப்பதைத் தடுக்கும் வகையில் பொலிஸார் பஸ் வண்டியை வீதிக்குக் குறுக்காக நிறுத்திய சம்பவம் நல்லூர் முருகன் அடியார்களை வெகுவாகப் பாதித்துள்ளது.

நல்லூர் முருகனின் முன்வீதி இணையும் பருத்தித்துறை வீதியில் நின்றால் கொடியேற்ற நிகழ்வைக் கண்டுகொள்ள முடியும்.

ஆகையால் நல்லூர்க் கந்தனைக் காலம் முழுவதும் தரிசித்த அடியவர்கள்; ஆலய முன்வீதி இணையும் பருத்தித்துறை வீதியில் நின்று, முருகனின் கொடியேற்றத்தைக் காண வந்திருந்தனர்.

இவ்வாறு வந்தவர்கள் ஆலய வெளி வீதிக்கோ அல்லது ஆலயத்துக்குள்ளேயோ செல்கின்ற நோக்கம் கொண்டவர்கள் அல்ல.

மாறாக, தெரு வீதியின் ஓரமாக நின்று கொடியேற்றக் காட்சியைக் கண்டுவிட வேண்டும் என்பதுதான் அவர்களின் நோக்கம்.

எனினும் பொலிஸார் தமது பஸ் வண்டியை வீதிக்குக் குறுக்காக நிறுத்தி கொடியேற்றத்தை மறைப்புச் செய்தனர்.

இந்த நடைமுறை எந்த வகையில் நியாயம் என்பதைப் பொறுப்புவாய்ந்த அனைவரும் ஒருகணம் சிந்திக்க வேண்டும்.

நல்லூர் முருகனின் முன்வீதியை தொடுக்கும் பருத்தித்துறை வீதியில் நல்லூர் செட்டித் தெருச் சந்திவரையான தெருவில் நின்று கந்தப்பெருமானின் கொடியேற்றத்தைக் காண வந்த அடியவர்களை ஒழுங்குபடுத்தி அவர்களின் இறை நம்பிக்கைக்கு வழிவிட வேண்டிய தார்மீகக் கடமை பொலிஸாருக்கும் யாழ். மாநகர சுகாதாரப் பிரிவினருக்கும் உரியது.

எனினும் அவ்வாறு அடியவர்களை ஒழுங்குபடுத்தாமல், கொடியேற்றக் காட்சியை மறைப்புச் செய்யும் வகையில் வீதிக்குக் குறுக்காக பஸ் வண்டியை பொலிஸார் நிறுத்தியமை சைவ மக்களைத் துன்பப்படுத்துகின்ற செயல் என்று கூறுவதைவிட வேறு என்னதான் சொல்ல முடியும்.

இல்லை, அடியவர்கள் கூடியதால் அப்படியொரு செயலைச் செய்தோம் என்றால் அதனை தலதாமாளிகையில் செய்ய முடியுமா? என்பதுதான் நம் கேள்வி.

எனவே சமய இறைவழிபாட்டைத் தடுப்பதாக பொலிஸாரோ அன்றி சம்பந்தப்பட்ட தரப்பினரோ செயற்படக்கூடாது என்பதுதான் நம் தாழ்மையான கோரிக்கை.

அடியார்கள் கூடுவது கொரோனாத் தொற்றுப் பரவுவதற்கு வழிகோலும் என்றால், நல்லூர் ஆலய சூழலில் அமைக்கப்பட்ட தடுப்பு எல்லைகளில் வைத்து அடியவர்களைத் திருப்பி அனுப்புங்கள்.

இதைவிட்டு கொடியேற்றக் காட்சியை காண்பதற்கு மறைப்புச் செய்தால், அது நாட்டுக்கும் ஆட்சியாளர்களுக்கும் பெரும் அவலத்தைத் தரும் என்ற உண்மையை உணர்ந்து கொள்ளுங்கள்.

# கோவிட் இறப்பு மற்றும் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் மாற்றங்கள் செய்யப்படவில்லை

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

கோவிட் தொடர்பில், ஊடகங்களுக்கு வெளியிடப்பட்ட உத்தியோக பூர்வ இறப்பு மற்றும் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் எதுவும் செய்யப்படவில்லை என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார சேவைகளின் துணைப் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் இதனைத் தெரிவித்துள்ளார்.

கோவிட் நோய்த் தொற்றுகள் மற்றும் இறப்புகள் தொடர்பான புள்ளி விபரங்களை மறைக்கவோ மாற்றவோ எந்த நடவடிக்கையும் செய்யப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

சில தவறான கணிப்பீடுகள் நடந்த கம்பஹாவில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் விவாதித்த பிறகு கணிப்பீடுகளில் ஏற்பட்ட சிக்கல் மற்றும் குறைபாடுகள் இப்போது சரிசெய்யப்பட்டுள்ளன என்று அவர் தெரிவித்துள்ளார்.

(ம- 3)

## கோவிட் தொற்றுக்குள்ளான 30 வயதுடைய பெண்

### தனது 9 மாத சிசுவுடன் தப்பியோட்டம்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த பெண்ணொருவர், அவரது 9 மாத பெண் சிசுவையும் தூக்கிக்கொண்டு கேகாலை பொது வைத்தியசாலையிலிருந்து தப்பிச்சென்றுள்ளார் என்று வைத்தியசாலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கலிகமுவ பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார்.

கேகாலை பொது வைத்தியசாலையில் 2 ஆம் இலக்க விடுதிப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்தபோதே அவர் தப்பிச் சென்றுள்ளார்.

பி.சி.ஆர். பரிசோதனைக்கு அமைவாக குறித்த பெண்ணுக்கும் அவரது 9 மாத சிசுவுக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த பெண்ணைக் கண்டறிவதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

(ம-3)

## வல்லிபுர ஆலய மகோற்சவத்தை சுகாதார முறைப்படி நடாத்த தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

நாட்டில் கொரோனா தொற்று நோய் அபாய நிலை நிலவும் சூழலில் ஆரம்பமாகவுள்ள ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி ஆலய மகோற்சவத்தை சுகாதார முறைப்படி நடத்த தீர்மானிக்கப்பட்டது.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி ஆலய மகோற்சவ கால ஏற்பாட்டுக் கூட்டம் நேற்றைய தினம் வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறீ தலைமையில் இடம்பெற்றது.

இதன்போதே வல்லிபுர ஆழ்வார் ஆலய மகோற்சவத்தை சுகாதார முறைப்படி நடாத்த தீர்மானிக்கப்பட்டது.

பூஜைகள் பக்தர்கள் பங்குபற்றுதல்இன்றி நடைபெறும். சுகாதார அமைச்சின் சுற்றிக்கையின் பிரகாரம் மதத் தலைவர்கள் உட்பட 100 அடியார்களே உரிய நேரத்தில் வழிபாடு செய்வதற்கு அனுமதிக்கப்படுவர்.

ஆலய உள்வீதியில் மட்டுமே பூஜைகள் மற்றும் சமய நிகழ்வுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன் வெளிப்புறச் சூழலில் எந்தவிதமான சமய நிகழ்வுகள், கலை நிகழ்வுகள் மற்றும் நேர்த்திக் கடன் நிறைவேற்றுதல் என்வற்றிற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. (ம-3,33)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை 15 ஆம் திகதி காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** இணுவில், இணுவில் கந்தசாமி கோவில், மஞ்சத்தடி இணுவில், மருதனார்டம் சந்தை, நாதன் கடை இணுவில், பாலாவோடை இணுவில், கலாசார மையம், மாவட்ட நீதிமன்றம் யாழ்ப்பாணம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, பொலிஸ் நிலையம் யாழ்ப்பாணம், தொழில்திணைக்களம், யாழ். நூலகம், இலங்கைத் தொலைத் தொடர்பு, முதலாவது குறுக்குத்தெரு, 3 ஆவது குறுக்குத்தெரு, மருத்துவமனை வீதி, கே.கே.எஸ்.வீதி, கோணாந்தோட்டம், எல்.ஐ.சி, காய்கறி சந்தை அருகில் மருத்துவமனை வீதி, தொட்டடி பழைய மீன் சந்தை, அஞ்சல் அலுவலகம் யாழ்ப்பாணம் நிலையம் பண்ணை, எஸ்.டி.எஸ். மருத்துவமனை, விஜிதா அரிசி ஆலை, கோண்டாவில் புகையிரத நிலைய வீதி, மாப்பியன், சுதுமலை, பத்தானை, தாவடி, உப்புமடம் ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** புத்தடி சந்தி, தொட்டியடி சந்தி, தொட்டியடி ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** பட்டாணிச் சூரிலிருந்து நெளுக்குளம் வரை, சுயன் அரிசி ஆலை, அஷ்வி அரிசி ஆலை, ஸ்ரீரங்கன் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை, ஜீவன் அரிசிஆலைஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, கூல்மென் ஐஸ்தொழிற்சாலை, எருக்கலம்பிட்டி நீர்வழங்கல் திட்டம், கீரி ஐஸ் தொழிற்சாலை, தொழிற்பேட்டை, கச்சேரிவளாகம், மன்னார் மருத்துவமனை, மன்னார் நீர்வழங்கல் சபை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், கடற்படை முகாம், ஓலைத்தொடுவாய், புதிய சில்க்ரோடு அகுடிக் கம்பனி பிறைவேட் லிமிட்டட் (கடல் உணவுக் களஞ்சியம்) பெரிய கரைசல் பல்மெய்ரா ஹவுஸ்- தலைமன்னார் பல்மெய்ரா ஹவுஸ், தப்ரபேன்உணவு (இறால் பண்ணை), எருக்கலம்பிட்டி மன்னார் தொலைத்தொடர்பு நிலையம், தலைமன்னார் வைத்தியசாலை, தலைமன்னார்கடற்படை முகாம், ரைமக்ஸ்ஆடை, வங்காலைப் பாடு சென்ட் லார்ட்ஸ் ஐஸ் தொழிற்சாலை, நீர் வழங்கல்- தோட்டக்காடு இளைஞர் படை பயிற்சி மையம், கார்கில்ஸ் பூட் சிட்டி, மன்னார், இலங்கை போக்குவரத்துச் சபை மன்னார், தள்ளாடி டயலொக், நடுக்குடா.பேசாலை ஐஸ் தொழிற்சாலை, கொன்வென்ட் வீதி, எழுத்தூர், எமில்நகர், எருக்கலம்பிட்டி, எரிபொருள் நிரப்பு நிலையத்தடி 4 ஆவது மைல்கல், ஜோசப்வாஸ் நகர், கடலேரி வீதி, க்ட்டுகாரங்குடியிருப்பு, கரைசல் திட்டம், கீழியங் குடியிருப்பு, கொன்னையன் குடியிருப்பு, குருசுபாடு கடற்படை முகாம், மாலுவாடி சந்தி, மன்னார் நகரம், மூர்வீதி, முள்ளிப்பள்ளம், நளவன்பாடி புதுத் தெரு (பள்ளிமுனை), ரைமக்ஸ் ஆடையகம் அருகில், இளையோர் சேவை மையத்தடி, ஓலைத்தொடுவாய், ஒல்லிமோட்டை, படப்பாடி நீர்வழங்கல், பள்ளிமுனை, பருத்திப்பண்ணை, பாவிலுப்பட்டான் குடியிருப்பு, பெரியகரைசல், பேசாலை, புதுக்குடியிருப்பு திடடம் ,புதுக்குடியிருப்பு, புகையிரத நிலையம்- சாந்திபுரம், சிலாவத்தை முகாம் சந்தி, சிறுநாவற்குளம், சிறுதோப்பு, சவுத்பார் இராணுவ முகாம், மன்னார் ஸ்ரீலங்கா ரெலிகொம், புனித செபஸ்ரியன் தேவாலயம், சணி கிராமம், தலைமன்னார், தலைமன்னார் கப்பல் வீடமைப்பு திட்டம், தலைமன்னார் புகையிரத நிலையம், தாழ்வுப்பாடு, தாராபுரம், தாராபுரம் திட்டம், தரவன்கொட்டு, தோட்டவெளி, துள்ளுகுடியிருப்பு தும்பு தொழிற்சாலை, துள்ளுகுடியிருப்பு திட்டம், மன்னார் யுசி மைதானம், வங்காலைப்பாடு ஆகிய பிரதேசங்களிலும். மின்சாரம் தடைப்படும். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—318

# அசேதன இரசாயன மாசுபடுத்தலை வெளிப்படுத்திய அமைதியான வசந்தம் நூல்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

அறுபதுகளில் வித்திட்ட பசுமைப் புரட்சியின் ஆரம்ப நாட்களிலேயே விவசாய இரசாயனங்களின் எதிர்த் தாக்கத்தை சூழலுக்கு குந்தகம் விளைவிக்கும் இன்னும் சூழலை மாசுபடுத்தும் எனக்கூறி உலக மக்களை ஆச்சரியத்தினுள் ஆழ்த்தியிருந்தார் றேச்சல் கார்சன் அவர்கள்.

ஆனால்அன்றைய நிலையில் உலக மக்களுக்கு உணவளிக்க வேறு வழியில்லை என்று கருதியதால் வந்த தொழில்நுட்பத்தில் புதியதான இதன் மூலம் திருந்திய கலப்பினங்களை உருவாக்கி விளைச்சலை பலமடங்கு அதிகரித்து காட்டியிருக்கின்றனர் உலக விஞ்ஞானிகள்.

அந்தக் காலகட்டத்தில் விளைச்சலை பெருக்குவது மிக முக்கியமான பணியாக விவசாய வல்லுநர்களுக்கு இருந்தது. அதனை அவர்களும் நிறைவேற்றியிருக்கின்றார்கள். ஆனாலும் அதனது பிந்திய தாக்கம் பற்றி எவருமே அலட்டிக் கொள்ளவில்லை என்பது தான் பலருக்கும் புரியாத புதிராக இன்னமும் இருக்கின்றது.

பிந்திய தாக்கம் என்பது ஐம்பது ஆண்டுகள் கழித்து பலருக்கு இனம்புரியாத நோய்களை உருவாக்க உருக் கொடுத்திருக்கிறது. அவற்றிற்கு காரணமாயிருக்கின்றது என்றால் தற்போதும் அதைப்பற்றி நாம் பாரதூரமானதாக கருத்திலெடுத்திருக்கவில்லை.

அசேதன இரசாயனங்களின் உருவாக்கம் பாரியளவிலான விளைச்சலை கொடுத்து மக்களை பசி பட்டினியிலிருந்து பாதுகாப்பது என்றால் அந்த மக்களில் நோயெதிர்ப்பு சக்தியை வலுவற்றதாக்கி இவ்வாறான கொரோனா போன்ற தொற்று நோய்கள் உலகளாவிய ரீதியில் மக்களை துவம்சம் செய்யும் போது அதனை எந்தவகையில் நியாயமாக்குவது என்னும் கேள்வி பலமாக எழுகின்றது அல்லவா.

உணவு கொடுக்கின்றோம். ஆனால் அது மக்களை தொற்று நோய்களிலிருந்து எந்தவகையிலும் பாதுகாக்காத சூழலுக்கு இட்டுச் செல்லும் என்னும் போது அந்த உணவின் பயன்பாடு அதனது தன்மை பற்றி பலரும் தற்போது சிலாகிக்கத் தொடங்கியிருக்கின்றார்கள் என்றால் அதனை நல்ல சகுனமாக பார்க்கலாம். ஆனாலும் காலந்தாழ்த்திய ஞானமாகத்தான் அது இருக்கும், இருக்கப் போகின்றது.

இந்த அவசர உலகத்து உணவுக்குள்ளும் அதன் சுவைக்குள்ளும் எம்மை சிறைவைத்த பலர் அதிலிருந்து மீண்டெழுவது மிக மிக சிரமமானதாக இருக்கப் போகின்றது. அசேதன இரசாயனங்கள் பசளைகளாயினும் சரி அல்லது பீடை நாசினிகளாயினும் சரி இவை இரசாயனக் கலவைககள்தான். இருப்பினும் அவற்றினாலான பக்க விளைவுகள் பாரதூரமானதாக இருக்கும் போது நாம் அவற்றை சிபார்சு செய்வது மிகவும் அபத்தமானது.

அசேதன இரசாயனங்களில் பல நீரில் கரையும் திறனற்றவை. மாறாக கொழுப்பில் கரையக்கூடியன. இந்த விடயத்தை சற்று ஆழமாக ஆராய்ந்தால் நீர் கரையும் திறனற்றவை.

ஆகையினால் அவை உடனடியாக விரைந்து உடலிலிருந்து அகற்றப்பட முடியாதவை. பொதுவாக கொழுப்புடல்களில் சேமித்து வைக்கப்படும். அதிலும் இனப்பெருக்க உறுப்புக்களுள்ள இடங்களில் அதனது அளவு அதிகமானதாக இருக்கும். பொதுவாகவே ஆசனிக்கு, எதிலீன் ஒட்சைட்டு மற்றும் ரின்டேன் ஆகியன புற்றுநோயை உருவாக்குவன என்பதனால் எந்த மூலக்கூறின் ஆதிக்கத்தால் இவ் இரசாயனங்கள் புற்றுநோயை உடலில் உருவாக்குவதற்கு கார ணமாயிருக்கின்றன. ஆய்வறிக்கைகளிலிருந்து பார்த்தால் மூளைப் புற்றுநோய் மற்றும் ஆண்களில் உருவாகும் புரோஸ்திரேற்று சுரப்பியில் புற்றுநோய் என்பன அசேதன இரசாயனங்களால் உருவாக்கப்படுகின்றன. அசேதன இரசாயன பசளைகள் புற்று நோயை உருவாக்குவதற்கு பலகாரணங்கள் முன்வைக்கப்படுகின்றன.

குறிப்பாக அசேதன இரசாயனப் பசளைகள் நுரையீரல் புற்றுநோயை வரவழைக்கும் அதிமுக்கியமான காரணியாகும். இவற்றுடன் குறிப்பாக மூளைப் புற்றுநோய் ஏற்படுவதற்கும் இவை காரணமாக இருப்பதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

விவசாய ஆய்வு அறிக்கைகளில் நீரில் காணப்படும் அதிகரித்த நைதரேற்று நைதரசனினால் அந்நீரை அதிகளவில் பருகும் மக்களுக்கு குறிப்பாக விவசாயப் பெருமக்களுக்கு குடல், சிறுநீரகம் மற்றும் வயிற்றுப்பகுதியில் புற்றுநோயேற்பட அதிக வாய்ப்புக்கள் உள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது.

மேலும் பெண்களில் அவர்களுக்கான ஓமோன்களான ஈஸ்ரஜன் மற்றும் புரோஜஸ்திரோன் என்பனவற்றின் அளவுகளில் மாற்றமேற்படும் போது அது புற்று நோயாக மாற்றமடைய வாய்ப்புக்கள் உண்டு. ஆய்வறிக்கைகள் முழுமையாக இந்த முடிவுகளை அறுதியாக வெளிப்படுத்தாத காரணங்களால் அசேதன இரசாயனங்களின் பாதிப்பை எமது மக்களும் முழுமையாக அறிந்திருக்க முடியாதிருக்கின்றது. ஆனாலும் ஏதோ ஒருவகையில் நாம் பயன்படுத்தும் அசேதன இரசாயனங்களின் தாக்கம் எமது சுகாதாரத்தை காலங்கடந்து பாதிக்கின்றதனை நாம் தற்போது உணர்கின்றோம் அல்லவா.

இந்தவிடயங்கள் எமது மக்களுக்கு முழுமையாக தெரியப்படுத்தப்படல் வேண்டும். இல்லையாயின் எமது மக்களை புற்றுநோயின் தாக்கத்திலிருந்து பாதுகாக்க முடியாமலேயே போய்விடும்.

தொற்றா நோய்களின் பாதிப்பு பலவழிகளில் இப்போது வயது வேறுபாடின்றி, பால் வேறுபாடின்றி அனைவரையும் பாதிக்கத் தொடங்கியிருக்கின்றதனை புற்றுநோயால் அவதிப்படும் மக்களைப் பார்க்கும் போது அவதானிக்க முடிகின்றது. எமது பிரதேசம் அதிக சனத்தொகையற்ற இடமாக காணப்படுகின்றபோதும் அசேதன இரசாயனங்களின் பாவனையை நாம் கவனத்தில் கொள்ளாது அதிகளவில் உள்வாங்கத் தலைப்பட்டுவிட்டோம்.

பீடைகளை கட்டுப்படுத்துவதனை காரணங்காட்டி பல வகையான அசேதன இரசாயனங்கள் தற்போது சந்தைக்கு வந்திருக்கின்றன. குறிப்பாக இரண்டு வருடங்களுக்கு முன்னர் சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு என தடை செய்யப்பட்ட அசேதன இரசாயனங்கள் தற்போது கல க்கப்பட்டு கலவையாகபுதிய பெயருடன் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றன. இதனை நாம் மிகவும் உன்னிப்பாக அவதானிக்கவேண்டும். எதேச்சையாக இவ்வாறான அசேதன இரசாயனங்களின் பாவனையை நாமே அதிகரித்து விட்டு பின்னர் இவ்வாறான நோய்களால் எம் மக்களை காவுகொள்ள விட முடியாது. எமக்கான கடமையாக இவ் இரசாயனங்களின் பாதிப்பை நாம்உன்னிப்பாகஅவதானிக்க வேண்டியதாயுள்ளது. கிடைக்கின்ற தகவல்களின் அடிப்படையில் இவ் இரசாயனங்களினால் ஏற்படும் முழுமையான பாதிப்பை மக்கள் உணரவைப்பதும் அதன் மூலம் அவர்களை இவ்வாறான நோய்களிலிருந்து பாதுகாக்கவும் வேண்டும்.

பயன்படுத்தும் அசேதன இரசாயனங்களால் சூழலுக்கான பாதிப்பை எதிர்வு கூறிய அமெரிக்காவில் உயிரியலாளராக பணிபுரிந்த றேச்சல் கார்சன் வெளிப்படுத்திய தகவல்களடங்கிய நூலான அமைதியான வசந்தம் **(Silent Spring)** தற் போதுள்ள நிலைமையை 1962ஆம் ஆண்டிலேயே வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. இவ்வாறான எதிர் விளைவுகளை அன்றே தீர்க்க தரிசனமாக வெளிப்படுத்திய றேச்சல் கார்சன் 56 ஆண்டுகள் உயிர் வாழ்ந்து இவ்வுலகை விட்டு உயிர் நீத்தார்.

ஆனால் அவர் வெளிப்படுத்திய சூழலுக்கு பாதிப்பான விடயங்கள் பல ஆண்டுகள் கழித்து இப் போது அதன் தாக்கத்தை உணர முடிகின்றது.

அசேதன இரசாயனங்களால் உற்பத்தியாகும் உணவுப் பொருட்களில் காணப்படும் அசேதன இரசாயனங்களின் மீதிகளை மாதிரி எடுத்து அவற்றை அளந்தறிய முற்பட்டால் இவ்வாறான இரசாயனங்களை பயன்படுத்துவதிலிருந்து எமது சந்ததிகளை நாம் காப்பாற்றிவிட முடியும். விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியை முழுமையாக பயன்படுத்தி இந்த பிரச்சினையை மக்களுக்கு விழிப்புணர்வாக மாற்றுவதும் மக்களுக்கான நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதும் பாரம்பரிய உணவுகள் மூலமாகவே சாத்தியம் என்பதனால் அதற்கான முன்னெடுப்புக்களை நாம் இனி மேலாவது செய்வது மிக மிக அவசியமானதாகும்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 331




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டை முழுமை...

லின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இதனை குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், பயணக் கட்டுப்பாடுகளில் ஓரளவு இறுக்கமான முறையை அமுல்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

நாளாந்தம் அதிகரிக்கும் கொரோனா மரணங்கள், தொற்றாளர்களின் எண்ணிக்கை தொடர்பில் சுகாதார துறையினரால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ம-3)

## மங்களவுக்கு...

மங்கள சமரவீரவுக்கு நேற்று முன்தினம் பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் அதன் முடிவுகளின் அடிப்படையில் அவருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

இதையடுத்து தற்போது அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## வீதியில் திடீரென...

வீதியில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையில் பணியாற்றும் ஊழியர் ஒருவர் நேற்று மதிய உணவுக்கு செல்வதற்காக புறப்பட்டுச் சென்ற சிறிது நேரத்தில் வீதியில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டம் உதயநகர் பகுதியைச் சேர்ந்த, 47 வயது மதிக்கத்தக்க விஜயகுமார் என்ற வெளிக்களத் தொழிலாளியே உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் கிளிநொச்சி நகரில் திருநகர் வீதியில் அரச நில அளவைத் திணைக்களத்துக்கு அண்மித்த பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் சுகாதாரத் தரப்பினர் மற்றும் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதாகவும் சாதாரணமாக பணிக்கு வந்தவர் திடீரென உயிரிழந்துள்ளமை மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (ம-3,100)

## குளவி கொட்டி...

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

குறித்த நபர் தனது வாகனத்தில் நேற்று முன்தினம் விறகு சேகரிக்கச் சென்ற சமயத்தில் தேங்காய் பறிப்பதற்காக தென்னை மரத்தில் ஏறியுள்ளார்.

இதன்போது கருங்குளவிக் கொட்டிற்கு இலக்காகியுள்ளார்.

உடனடியாக அவர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்றைய தினம் மாலையே அவர் உயிரிழந்துள்ளார்.

புங்குடுதீவு 1ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அமிர்தலிங்கம் பவிக்குமார் (வயது-31) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். (ம-3,18)

## வரதராஜ...

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா பெருந்தொற்றைக் கருத்தில்கொண்டு சுகாதாரதுறையினரின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க மகோற்சவம் நிறுத்தப்பட்டுள்ளது என பரிபாலன சபை விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டுக்கான ஆவணி மகோற்சவம் இன்று 14ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாக விருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கொரோனா உச்ச...

பட்ட கோவிட் மரணங்கள் பதிவாகியுள்ளன.

மேலும் நாட்டில் நேற்றும் 3,142 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் நேற்று முன்தினம் மேலும் 155 கோவிட் மரணங்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதையடுத்து இலங்கையில் இதுவரை கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழந்தவர்களது எண்ணிக்கை 5775 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## யாழ் - 64...

ணத்தில் 97 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் நேற்று 158 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் யாழ். மாவட்டத்தினைச் சேர்ந்த 33 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் 650 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் யாழ். மாவட்டத்தினைச் சேர்ந்த 31பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 64 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3)

## கோவிட்டை...

எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இதன்போது பேசிய அவர்,

நாங்கள் தயாரித்த அறிக்கையை சுகாதார அமைச்சர் மற்றும் அரசாங்கத்திடம் சமர்ப்பித்தோம்.

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய தீவிரமான சூழ்நிலையைக் குறிப்பிட்டு அந்த அறிக்கை ஊடகங்களுக்கு வழங்கப்பட்டது. அந்த அறிக்கையின்படி, இந்த ஆண்டு இறுதிக்குள் இலங்கையில் 30 ஆயிரம் மரணங்கள் ஏற்படலாம் என்றார். (ம-3)

## யாழில் மேலும்...

னர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கைதடியைச் சேர்ந்த 78 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்புத்துறையைச் சேர்ந்த 79 வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புத்தூரைச் சேர்ந்த 75 வயதுடைய ஆண் ஒருவரும் ஏழாலை மயிலங்காடு பகுதியைச் சேர்ந்த 69 வயதுடைய ஆண் ஒருவரும் கோண்டாவிலைச் சேர்ந்த 48 வயதுடைய ஒருவரும் என 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 176ஆக உயர்வடைந்துள்ளது.

மேலும் செட்டிகுளம் வைத்தியசாலையில் உயிரிழந்த பெண்ணுக்கு யாழ். போதனாவில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## நாட்...

நேற்று ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற கோவிட் - 19 பரவுகையைத் தடுப்பது தொடர்பான செயலணியின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை அறிவிக்கும் இராணுவ தளபதியின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அனைத்து மாகாணங்களுக்கு இடையேயான பொதுப்போக்குவரத்து சேவைகள் இரு வாரங்களுக்கு இடைநிறுத்தப்படுகின்றன.

துறைமுகங்கள், விமான நிலையங்கள் மற்றும் அத்தியாவசிய சேவை பணியாளர்கள், சுகாதாரம், ஆடை மற்றும் விவசாயத் துறைகளில் பணிபுரிபவர்களுக்கு மாகாணங்களுக்கு இடையேயான பயணம் அனுமதிக்கப்படுகிறது.

செப்ரெம்பர் 15ஆம் திகதிக்குப் பின்னர் கோவிட்-19 தடுப்பூசி போடப்பட்டதாகக் குறிப்பிடும் அட்டை இல்லாதவர்கள் பொது இடங்களில் சோதிக்கப்படுவார்கள் என்றுள்ளது. (ம-3)

## கொடியேற்ற...

நேரம் அமைதியின்மை ஏற்பட்டது.

நேற்று நல்லூர்க் கந்தபெருமானின் கொடியேற்றம் காலை 10 மணிக்கு இடம்பெற்றது.

கொரோனாத் தொற்றுக் காரணமாக ஆலய உள் வீதியிலும் வெளி வீதியிலும் அடியார்கள் அனுமதிக்கப்படாத நிலையில்,

ஆலய முன் வீதி தொடுக்கும் பருத்தித்துறை வீதியில் நின்று கொடியேற்றத்தைக் காண அடியவர்கள் காத்திருந்தனர்.

இதன்போது பருத்தித்துறை வீதியும் செட்டித்தெருவும் சந்திக்கும் இடத்துக்குக் குறுக்காக பொலிஸார் பஸ் வண்டியை நிறுத்தி அடியவர்கள் கொடியேற்றத்தைக் காணமுடியாமல் தடை செய்தனர்.

இதனால் அங்கு நின்ற அடியவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே சிறு வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்நிலையில் வீதியில் வைத்து கற்பூரத்தை ஏற்றிவிட்டு அடியவர்கள் வீடு திரும்பினர். (ம-3,33)

## 60 வயதுக்கு...

செலுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சுகாதார அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார். (ம-3)


தன நிதானய
திகதி - 2021.08.13
சீட்டிழுப்பு இலக்கம் - 565
G 12 21 51 58
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 13.08.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2830
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
C 12 23 24 25
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2021/08/13
சீட்டிழுப்பு இலக்கம் 4535
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
F 0 3 8 9 4 7
தேசிய லொத்தர் சபை

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2021/08/13 1611 சீட்டிழுப்பு இலக்கம்
சுப்பர் இலக்கம் 07 வெற்றி இலக்கங்கள் 06 25 30 60

மெகா பவர்
திகதி 13/08/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0883
வெற்றி எழுத்து சுப்பர் இலக்கம் வெற்றி இலக்கங்கள்
T 16 07 30 40 48

அத கோடிபதி
கிழமை: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1338
சீட்டிழுப்பு திகதி: 13.08.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 53,348,492
வெற்றி இலக்கங்கள் 09 10 67 75 U
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
கிழமை: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3679
சீட்டிழுப்பு திகதி: 13.08.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 33,303,660.30
வெற்றி இலக்கங்கள் 09 10 25 33 V
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் 5,095,243/=
திகதி: 13.08.2021
வெற்றி வாரம்: 3224
வர்ணம்:
வெற்றி இலக்கங்கள் மகரம்
06 31 37 41
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 8,531,800/=

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1512
சீட்டிழுப்பு திகதி 13/08/2021
தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
D 24 49 52 60
அடுத்த சுப்பர் ஜக்பொட் 63,324,478.80/=

கப்ருக
சீட்டிழுப்பு வாரம் 743
13.08.2021 வெள்ளிக்கிழமை
C 14 21 77 79
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 83,476,950
Web: www.dlb.lk


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மிகவும் இக்கட்டான நிலையில் யாழ். போதனா

# கொரோனாவால் இறந்தவர்களை தகனம் செய்வதில் பிரச்சினை

### யாழ். போதனா பதில் பணிப்பாளர் ஸ்ரீபவானந்தராஜா



*(யாழ்ப்பாணம்)*

**கொரோனாத் தொற்றால் மிகவும் இக்கட்டான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை காணப்படுகின்றது. கொரோனாவால் இறந்தவர்களைக் கூட தகனம் செய்வதில் கடும் பிரச்சினை காணப்படுவதாக யாழ். போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் எஸ். ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்துள்ளார்.**

யாழ். போதனா வைத்திய சாலையில் நேற்று நண்பகல் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது வைத்தியசாலை தற்போதைய நிலைவரத்தின்படி வைத்தியசாலையின் விடுதிகள் மற்றும் அதிதீவிர சிகிச்சை பிரிவுகள் எல்லாமே கொரோனா நோயாளிகளால் நிரம்பியிருக்கின்றன.

எங்களுக்குரிய மிகக்குறைந்த வளங்களுடன் எமது சேவைகளை நாம் முன்கொண்டு செல்கின்றோம். வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதியர்கள் மிகுந்த நெருக்கடியை இதனால் சந்தித்து வருகின்றனர்.

அந்த வகையில் இங்கு கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை தீவிரமாக அதிகரித்து வருவதனால் வைத்தியசாலை மிகவும் இக்கட்டான கட்டத்தில் உள்ளது.

எமது கோப்பாய் இடைத் தங்கல் சிகிச்சை நிலையத்தில் 420 பேரை பராமரிக்கின்ற வசதிகள் இருந்தும் நேற்று 430 பேருக்கு மேல் அதிகமாக அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர்.

வைத்தியசாலைக்குத் தேவையான ஒட்சிஜன் சிலிண்டர்கள் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது. நாங்கள் இதுவரை ஒட்சிஜன் சிலிண்டரை பெற்றுக்கொள்ள அனுராதபுரத்திற்கு மட்டுமே சென்றிருந்த போதும் அங்கும் தட்டுப்பாடு உருவாக நேற்று முதல் கொழும்புக்கும் செல்லுகின்ற நிலை உருவாகியுள்ளது.

கொரோனா தொற்றால் இறந்தவர்களின் சடலங்களை தகனம்செய்வதில் சில பிரச்சினைகளை எதிர்நோக்கி இருக்கிறோம்.

யாழ். மாவட்டத்தை பொறுத்தவரை கோம்பயன்மணல் இந்து மயானத்தில் மாத்திரமே மின்சாரம் மூலம் சடலங்களை தகனம் செய்யும் வசதி இருக்கின்றது. தினமும் அங்கு நான்கு பேரை மட்டுமே மின்தகனம் செய்யக்கூடிய வசதி இருக்கின்றது.

யாழ். போதனா வைத்திய சாலையிலும் சரி ஏனைய வைத்தியசாலைகளிலும் சரி கொரோனாவால் உயிரிழப்பவர்களை அங்குதான் கொண்டு செல்ல வேண்டிய தேவை இருக்கின்றது.

கடந்த ஐந்து மாதங்களில் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் 140 பேரும் ஏனைய வைத்தியசாலைகளில் 16 பேருமென மொத்தமாக 156 பேரை மின்தகனத்திற்கு அனுப்ப வேண்டி இருந்தபடியால் இன்னும் பல பேரின் சடலங்கள் தேங்கி இருக்கின்றன.

மேலும் வைத்தியசாலையில் விபத்து பிரிவிற்கு தினமும் 70 தொடக்கம் 80 பேர் வரையில் அனுமதிக்கப்படுகின்றார்கள். அவர்களுக்கும் எமது சேவையை வழங்குவதால் கோவிட் நோயாளர்களை கவனிப்பதிலும் நமக்கு சில சிரமங்களை எதிர்நோக்க வேண்டியதாக உள்ளது.

எனவே இவற்றை குறைக்க வேண்டும். இவற்றை குறைப்பதற்கான ஒரே வழி தேவையற்ற நடமாட்டங்களை குறைக்க வேண்டும் . அத்துடன் ஆடம்பரமான கொண்டாட்டங்கள் தேவையற்ற விழாக்களை மக்கள் தவிர்க்க வேண்டும்.

எமது இக்கட்டான நிலையை மக்களுக்கு அறிவிக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. நாம் மீண்டும் கூறுவது என்னவென்றால், மக்களாகிய நீங்கள் தேவையற்று வெளியில் நடமாடாமல் சமூகப் பொறுப்புடன் சமூக இடைவெளியை பயன்படுத்தி சுகாதார நடவடிக்கைகளை இறுக்கமாக பேணுவதுதான் வைத்தியசாலைக்கும் சமூகத்திற்கும் நீங்கள் செய்யும் ஒரே ஒரு நன்மையாக இருக்கும் என்றார்.

(ம-03,18,33)

## கல்விக்காக ஒதுக்கப்பட்ட அலைவரிசைகள் அடுத்தவாரம் ஆரம்பிக்கப்படும்

### கல்வியமைச்சர் பீரிஸ் அறிவிப்பு



(கொழும்பு)

கல்விக்காக ஒதுக்கப்பட்ட 20 தொலைக்காட்சி அலைவரிசைகள், ஆறு புதிய தொலைக்காட்சி அலைவரிசைகள் மற்றும் ஒரு வானொலி அலைவரிசை என்பன அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படும் என்று கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஊடக அமைச்சில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய அவர், "விஷன் எஃப்எம்" வானொலி நிலையம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து தொடங்கப்படும் என்று கூறியுள்ளார்.

இந்த கல்வி அலைவரிசைகள் PEO TV மூலம் இலங்கை டெலிகொமுடன் இணைந்து செயற்படும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். (ம-03)

## விபத்தில் படுகாயமடைந்த இளைஞன் உயிரிழப்பதற்கு முன்பு சிறுநீரக தானம்

(யாழ்ப்பாணம்)

கடந்த 9 ஆம் திகதி மருதனார்மடத்தடியில் பட்டா ரக வாகனத்தின் கண்ணாடியுடன் மோதி, படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த இளைஞன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். அவர் உயிரிழப்பதற்கு முன்பாக தனது இரண்டு சிறுநீரகங்களையும் தானம் செய்துள்ளார்.

இணுவில், தியேட்டர் வீதியைச் சேர்ந்த தங்கராசா பிரிஞ்சன் (வயது-29) என்பவரே இவ்வாறு சிறுநீரகங்களை தானம் செய்தார். அவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-975/=Kg
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி
(C-2438)
0768226240 DHL

VISA விண்ணப்பங்கள்
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✔ONLINE APPLICATIONS
✔VISA APPOINTMENTS
✔PASSPORT APPLICATION
✔POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
VISA
• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
(C-2522)
Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

பணிப்பெண் தேவை
கொழும்பு தெகிவளையில் உள்ள மூன்று பேர் கொண்ட வைத்தியரின் வீட்டிற்கு வேலை செய்வதற்கு ஒரு துப்புரவான, நேர்மையான பணிப்பெண் வேண்டும். சம்பளம் 35,000/= இற்கு மேல்
(7638)
Dr.தேவா
077 217 7995|076 764 6888

IELTS
DMI COMPUTER EDUCATION
0777 17 35 17
#Student VISA மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
# Unique Test Tips
# 40 hrs with free 4 mock exam
# Latest course Material (Book 15)
Academic or General
IELTS Life Skills - A1
திருமணம் செய்து UK செல்வோருக்கானது
DMI , British Council இன்
அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்
யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்
DIPLOMA IN ENGLISH
SPOKEN ENGLISH
புதிய பிரிவு ஆரம்பம் 14/8/2021
Sat, Sun- 3 pm
Mon to Fri 8 am
ZOOM Online
German - Germany ,Swiss நாட்டுக்கு செல்வோருக்கு Deuctsch
French - France நாட்டுக்கு செல்வோருக்கு (C-2514)
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி 0777 24 07 07 021 222 4403
சாவகச்சேரி 021 227 0775 0777227074
சுன்னாகம் 021 224 1970 0776032300
சண்டிலிப்பாய் 021 225 6665 0761354503
கிளிநொச்சி 021 228 5655 0776398096
021 226 2470 0777577333

வேலை வாய்ப்பு
சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் உணவகம் ஒன்றுக்கு சமையல் வேலை செய்பவர், சமையல் உதவியாளர், கொத்துரொட்டி தயாரிப்பவர், பிறைட் றைஸ் தயாரிப்பவர், ரொட்டி தயாரிப்பவர், உணவு பரிமாறுபவர் ( waiter ) போன்ற பணிகள் செய்வதற்கு முன் அனுபவம் உள்ளவர்கள் நேரில் வரவும்.
(C-2513)
077 649 1027
077 940 0963

நல்லூர்க் கந்தன் திருமண சேவை
எல்லா மதம், இனம், வெளிநாடு, உள்நாடு ஆகிய சகல திருமணங்களும் எம்மால் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.
(7639)
பருத்தித்துறை வீதி, நல்லூர் MC அருகில் யாழ்ப்பாணம்.
077 973 3183
வி.ஜெயந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.